கீதாசார்யன் 547

कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி
தாழ்வாதுமில் குரவர் தாம் வாழி – ஏழ்பாரும்
உய்ய அவர்கள் உரைத்தவைகள்தாம் வாழி
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

ஆண்டு 46	நம்மாழ்வார் ஆண்டு 5125 குரோதி சித்திரை (ஏப்ரல் 2024)	இதழ் 7

நல்வார்த்தைத் திரள்

ஸ்ரீமதுபயவேதாந்த மஹாவித்வான் காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசார்ய ஸ்வாமி

சில திவ்ய தேசங்களின் திருநாம மாறுபாடு

59. ஆழ்வார்களின் மங்களாசாஸனம் பெற்ற திவ்ய தேசங்களில் பல திருப்பதிகளின் திருநாமங்கள் நாளடைவில் திரிவுற்று வழங்கிவருகின்றன. இவற்றில் அவிவேகிகள் மயங்கி யிருப்பது ஆச்சரியமல்ல, சில விவேகிகளுங்கூட மயங்கி யிருப்பதால் தத்துவத்தை விளக்கி வைப்பது நலமென்று தோன்றி இஃது எழுதப்படுகின்றது.



மலைநாட்டில் சில திருப்பதிகளின் பெயர்கள் மலையாளர்களின் வழக்கில் சிதைந்தே யிருக்கின்றன. திருவண்பரிசாரத்தைத் திருப்பதிசாரமென்றும், திருவித்துவக்கோடுதன்னை திருமிற்றக்கோடு என்றும், திருவல்லவாழை திருவல்லா என்றும், திருவாறன்விளையை ஆறம்முளேயென்றும் இப்படி வழங்கி வருகிறார்கள். அவற்றைப் பற்றின திருத்தம் இங்கு அவச்யமன்று. ஆவச்யகமான திருத்தங்களைக் காட்டுகிறோம்.

60. திருக்கோவலூர்: இது நடுநாட்டுக் திருப்பதிகள் இரண்டில் ஒன்று. திருக்கோவலூர் என்றே ஆழ்வார்கள் பாடியுள்ளார்கள், "கோபாலபுரம்" என்பது கோவலூர் என்றாயிற்று என்று பெரியார் சொல்லுவர்கள். இதைத் திருக்கோவிலூர் என்றே

விவேகிகளுக்கூட வழங்கிவருகிறார்கள். திருக்கோயிலூர் என்று தபால் முத்திரையும் ரைல் ஸ்டேஷன்களில் பிரசுரமும் மலிந்துவிட்டது. அதுவே ஸ்ரீவைஷ்ணவர்களின் நெஞ்சிலும் ஊறிவிட்டது போலும். திருக்கோவலூர் என்றே வழங்கவேண்டும்.

61. திருவிந்தளூர்: ''இந்துபுரம்'' என்பது இந்தளூர் என்றாயிற்று. இந்தளூர் என்றே ஆழ்வார் பாடல். இதைத் திருவிழந்தூர் என்று பெரும்பாலும் வழங்கி வருகிறார்கள். தபால் முத்திரையும் இப்படியே ஏற்பட்டுவிட்டது. "குத்தாலத்தினருகே யுள்ளது தேரழுந்தூர், மாயவரத்தினருகே யுள்ளது திருவிழந்தூர்'' என்றும் சிலர் எழுதி வைத்திருக்கிறார்கள். திருவை இழந்தவூர்' என்று பொருள்படும்படி இங்ஙனே வழங்குவது அவசியம் மறக்கவும் மறுக்கவும் தக்கது. திருவிந்தளூர் என்றே சொல்லவேணும்.

62. திருத்தண்கால்: ஸ்ரீவில்லிபுத்தூர் ப்ராந்தத்திலிருக்கின்ற திருத்தண்கால் என்கிற திவ்யதேசம் இவ்விதமாகவே ஆழ்வார் பாடல் பெற்றது. இதை 'திருத்தாங்கல்' என்றே பலரும் வழங்கி வருகிறார்கள். "திருத்தண்காலுக்கு வழி எப்படி?" என்று ஒரு பெரியாரை நாம் கேட்க நேர்ந்தபோது, அவர் சிறந்த அத்யாபகராயிருந்தும், "திருத்தண்கால் காஞ்சீபுரத்திலன்றோ இருக்கிறது? இங்கு ஏது?" என்றார். "திருத்தாங்கலுக்கு வழி கேட்கிறீரோ?" என்றும் சொன்னார். காஞ்சீபுரத்தில் ஸ்ரீதீபப்ரகாசன் ஸன்னிதி யென்கிற விளக்கொளி திவ்ய தேசத்திற்கு ''திருத்தண்கா'' என்று வ்யபதேசம்; திருத்தண்கால் என்றல்ல. *விளக்கொளியை மரதகத்தைத் திருத்தண் காவில்* என்பது திருநெடுந்தாண்டகப் பாசுரம். *யாம் சென்று காண்டும் தண்காவிலே* என்பது பெரிய திருமொழிப்பாசுரம், தண்கால் வேறு, தண்கா வேறு. தண்காலை தங்காலக்ஷேத்ரம் என்று சிலர் வழங்கிவருவதோடு நில்லாமல் அப்படியே ஒரு புராணமும் கல்பனை செய்திருக்கிறார்கள். இது மிகவும் அருவருக்கத்தக்கது. "தமிழில் தண்கால் என்றும், ஸம்ஸ்க்ருதத்தில் தங்காலமென்றும் ஒப்புக்கொண்டால் என்ன பாதகம்" என்றும் சிலர் கேட்கிறார்கள். 'திருத்தாங்கல் மான்மியம்' என்றே ஒரு புத்தகம் அச்சிட்டிருப்பது கண்டு மிக வருந் தினோம். (*)

கண்ணயிரான்மேல் முறையீடுகள்

பெரியாழ்வாருடைய ஆச்சரியமான அநுபவங்களில் இதுவொரு விலக்ஷணாநுபவம். பெரியாழ்வார் திருமொழி இரண்டாம் பத்தில் *வெண்ணெய் விழுங்கி வெறுங் கலத்தை* என்னும் பதிகத்தில் சில பாசுரங்களின் அநுபவம்.

63. கோபிகள்:- யசோதைகங்காய்! நீ நல்லபிள்ளை பெற்றாயம்மா! வீடுதோறும் புகுந்து புண்ணிலே புளிரஸம் பெய்தாற்போன்ற பொறுக்கவொண்ணாத தீமைகளையன்றோ உன் மகன செய்கின்றான். இவனுடைய அண்ணனான பலராமனும் இச்சேரியில் வளர்ந்து திரிகின்றானே, அவனால் ஒருவர்க்கு ஒருவித கஷ்டமுண்டா? அவனைப் பற்றி ஒருவராவது ஒரு நாளாவது முறையிடுவதுண்டா? அவன் தம்பியென்று சொல்லிக்கொள்ளுகிற விவன் அவனோடு சிறிதும் சேர்த்தியுடையவனாக இல்லையே; இவனை நீ இப்படித் தீம்பிலே தகணேறும்படி விட்டிருப்பது நியாயமா? உடனே அவனை அருகே யழைத்துக்கொள்.

64. யசோதை:- ஆய்ப்பெண்டுளே! 'உன் மகன் தீமை செய்கிறான், தீமை செய்கிறான்' என்கிறீர்களே யல்லது இன்ன தீமையென்று சொல்லுகிறீர்களில்லையே; இன்னது செய்தான் என்று சொல்லுங்கள், கேட்போம். (கண்ணன் தீம்புகளைக் கேட்க யசோதைக்கு வெகு குதூஹலம்.)

65. கோபிகள்:- நாங்கள் வெகு சிரமப்பட்டுச் சேமித்துவைத்த வெண்ணெயைச் சிறிதும் மிச்சப்படாமல் எடுத்து விழுங்கிவிட்டானே. எங்கள் மகன் உன் வீட்டில் வந்து இப்படி

விழுங்கினானாகில் நீ பொறுத்திருப்பாயா?

66. யசோதை:--கோபிகாள்! என் மகன் வெண்ணெயைத் தானே விழுங்கினான்? வேறொன்றும் செய்திலனே. இதற்கென்ன ப்ரமாதம்! எவ்வளவு வெண்ணெயை அவன் விழுங்கினானோ அவ்வளவும் நான் கொடுத்துவிடுகிறேன்; இதோ பெற்றுக் கொள்ளுங்கள். தெருவதிரக் கூப்பாடு போடாதீர்கள்; வாளாவிருங்கள்.

67. கோபிகள்:- அம்மா! வெண்ணெய் விழுங்கினெதொன்றேயோ? அது மாத்திரமே யானால் நாங்கள் இவ்வளவு வருந்துவோமா? அது வைத்திருந்த பாத்திரம் எப்படிப்பட்டது தெரியுமா? அதன் அருமை பெருமை உனக்கென்ன தெரியம்? அதைப் பாறைமேலிட்டு உடைத்திட்டானே! இப்படியொரு கேள்வியற்ற செயலைச் செய்யலாமா?

68. யசோதை:- பெண்காள்! அவனையே நீங்கள் கேட்கலாகாதா ? "ஏனப்அா! வெண்ணெயைத் தான் விழுங்கினாய், வெறுங்கலத்தை ஏதுக்கு இப்படி யுடைக்கிறாய்? இதன்மேல் உனக்கு என்ன கோபம்?" என்று நீங்களே அவனைக் கேட்டிருக்கலாமே.

69. கோபிகள்:- யசோதாய்! நாங்கள் அது கேளாமலில்லை; கேட்டோம்; கலத்தைக் கல்லிவிட்டு உடைக்கும்போது செவிக்கனிய ஓசையொன்று உண்டாகிறதாம்; அதைக் கேட்பதில் தனக்கு மிகுந்த குதூஹலமாம். அதற்காகவே கலத்தை யுடைப்பதாகச் சொல்லுகிறான். இங்ஙனே பேசவன்றோ அவன் கல்வி கற்றிருக்கிறான். இப்படி ஒன்றல்ல இரண்டல்ல; வெண்ணெய் விழுங்குவதும் வெறுங்கலத்தை வெற்பிடையிட்டதும் மாத்திரமேயா? ஓவ்வொரு மனையிலும் அவன் புகுந்து பொறுக்கொணாதபடி செய்த தீமைகளை எங்களால் தடுக்க முடியவில்லையே; இப்படி அவனை விட்டீராமே சடக்கென அழைத்துக் கொள்.

யமசாதை கண்ணனை சிக்ஷித்தல்

70, யசோதை கண்ணா ! இப்படியும் தீம்பு செய்வாயோ? நீ நம் விட்டைவிட்டு வெளியே செல்வது நியாயமேயன்று; இங்கு வந்து சேர்வாயாக. உடனே வந்துசேர். காலதாமதம் செய்யாமல் சீக்கரம் வந்து சேர். வாமனாவதாரத்தில் செய்த கள்வத்தை என்னிடமும் செய்யாதே வந்து சேர்; உன்னுடைய குழலழகையும் வாயழகையும் கண்டு உகப்பார் வீடுகளிலே சென்று நீ தீம்பு செய்தாலும் அவர்களுக்கு போக்யமாகும்; உன் வடிவழகிலே யீடுபட வறியாத பெண்களிடஞ் சென்று தீம்புகளைச் செய்யாதே வந்துசேர். பிரானே! உன்னுடைய பண்டைக்குலப் பெருமையை நன்கறிந்துகொண்டு, அதற்குத் தகாதபடி தீமைசெய்து திரிவதைத் தவிர்ந்து வந்து சேர்.

(யசோதை இப்படிச் சொல்லியழைக்கவும் கண்ணன் வந்திலனாக, ஒரு கோபியைப் பார்த்துச் சொல்லுகிறாள்.)

71. நங்காய்! இப்பிள்ளை முன்போலில்லையம்மா. முன்பெல்லாம் சொன்ன சொல் தட்டாது கேட்பன். கூப்பிட்டால் உடனே வந்து நிற்பன். இப்போது அப்படியில்லை. எனக்கு அடியோடு அடங்குவதில்லையிவன். (என்று சொல்லிவிட்டு மறுபடியும் கண்ணனை நோக்கியே சொல்லுகிறாள்.)

72. கண்ணா! உன்னைப்பற்றி என் காதில் விழும் பேச்சுகளைக் கேட்டாலோ உன்னைக் கட்டியடிக்க எவ்வளவோ கோபமுண்டாகிறது எனக்கு. ஆனால் உன் அஞ்சன மேனியைக் கண்டாலோ 'மாணிக்கமே யென்மணியே' என்று சொல்லி உருகவேண்டி யிருக்கிறதே யொழிய அடிக்கக் கையெழுவதில்லையப்பா. என் அஞ்சன வண்ணா! நம்முடைய குடிப் பெருமை உனக்குச் சிறிதும் தெரியவில்லையே! உன்னைப்பற்றி அவமானமாக ஒருவர் ஒன்று சொன்னால்

கேட்டுத் தரித்திருக்க என்னால் முடியவில்லையே. உன்னுடைய ஸௌலப்ய ஸௌசீல்யாதி குணங்களுக்கு உகப்பாரில்லையே. அசலகத்தாரன்றோ பரிபவம் பேசுகிறார்கள். அவர்கள் நிற்கின்ற இடத்தில்கூட நீ நிற்கலாகாதே; என் கண்மணி! இங்கே வந்து சேர்.

''பாவியேனுக்கு இங்கே போதராயே'' என்பது பாசுரத்தின் முடிவு. பாவியேனுக்கென்றது பரம ஸந்தோஷத்தோடு சொல்லிக் கொள்ளும் வார்த்தையே யொழிய வெறுப்புடன் சொல்லும் வார்த்தை யன்று. கீழே இவள் தானே *என்ன நோன்பு நோற்றாள் கொலோ இவனைப் பெற்ற வயிறுடையாள் என்னும் வார்த்தையெய்துவித்த விருடீகேசா!* என்று சொல்லியிருக்கையாலே, கண்ணன் தீம்பு செய்து வளர்வதைத் தனக்குப் பரமபாக்யமாக நினைத்திருப்பவளாதலால் பாவியேனுக்கென்றது எதிர்மறை யிலக்கணையால் பரமபாக்யவதியான எனக்கென்று பொருள்தரும்.

அபத்தங்களில் ஒரு ஆச்சரியம்

73. ஸந்த்யாவந்தன மந்த்ரம் தாப்பண மந்த்ரம் ஸ்தோத்ர பாடங்கள் முதலானவை இளமையில் கற்பிக்கப்படும்போது கற்பிக்கின்றவர்களாலோ கற்கின்றவர்களாலோ அவற்றில் அபத்தங்கள் ஏற்படுகின்றன வென்பதில் ஆச்சரியமில்லை. ஆனால் அந்த அபத்தங்கள் இமவந்தம் தொடங்கி யிருங்கடலளவும் பெரும்பாலும் ஏகரீதியாயிருந்து வருவது மிகவும் ஆச்சரியத்தைத் தருகின்றது. ஒன்றிரண்டு விஷயங்கள் கேண்மின்.

74. திருக்கச்சிநம்பிகள் அருளிச் செய்த தேவராஜாஷ்டகம் ஸகல தேசங்களிலும் பரவியுள்ளது. இதில் *ஸம்ஸார மருகாந்தாரே துர்வ்யாதி வ்யாக்ரபீஷணே, விஷயக்ஷுத்ர குல்மாட்யே த்ருஷாபாதபசாலிநி* என்பது ஒரு ச்லோகம், இந்த ச்லோகத்தின் முடிவில் சாலிநி என்றுதானுள்ளது; சாலிநே என்று கிடையாது. அது அநந்விதம். ஆனால் மற்ற மூன்று பாதங்களும் ஏகாராந்தமாகவே யிருப்பதால் இதுவும் ஏகாராந்தமாகவேதான் இருக்கவேணுமென்று கருதியோ வேறு எந்த காரணங் கொண்டோ சாலிநே என்றே சொல்லி வருமவர்களை நம் நாட்டில் பெரும்பாலும் காண்கிறோம். நமது ஸமீப யாத்திரையில் பல ஊர்களில் பல பேர்கள் வாயில் இந்த ச்லோகம் அநுஸந்திக்கப்படுவதைக் கேட்க நேர்ந்தது. ஒருவர் தப்பாமல் சாலிநே என்றே சொல்லக் கேட்டு வந்தோம். இது ஒரு ஆச்சரியமான விஷயமாகவே யெமக்குத் தோன்றிற்று. மற்றொன்றுங் கேண்மின்.

75. ஆளவந்தாரருளிச் செய்த காந்தஸ்தே என்று தொடங்குகிற சதுச்ச்லோகியும் உலகமெங்கும் பரவியுள்ளது. இதில் *சாந்தாநந்த* என்கிற நாலாவது ச்லோகத்தில் இரண்டாவது பாதம் *மூர்த்தம் ப்ரஹ்ம ததோபி தத்ப்ரியதரம்....* என்பது. ஆனால் நமது நாட்டினர் யாவரும் "தத்ப்ரியதரம்" என்பதை "யத்ப்ரியதரம்" என்றே ஒருவர் தப்பாமல் சொல்லி வருகிறார்கள், இந்த அபத்தம் ஹ்ருஷீகேசம் வரையில் ஒரே ரீதியாயிருப்பதைக் கண்டு வந்தோம். இதைப் பார்த்தால் ஆளவந்தார் திருவாக்கலேயே "யத்ப்ரியதரம்" என்றுதான் அவதரித்திருக்குமோ! என்று கூட சங்கிக்க வேண்டியதாகிறது, ஆனால் அப்படியில்லை. "தத்ப்ரியதரம்" என்பது தான் அவதரித்த பாடம். எந்த காரணத்தாலோ தப்புப் பாடம் ஸகல தேச வ்யாபியாய் விட்டது. எந்தப் பதிப்பை யெடுத்துப் பார்த்தாலும் இந்தத் தப்புப் பாடந்தான் காண்கிறது. இனி இது எந்த யுகத்தில் எப்படி மாறப்போகிறது! இங்ஙனே பரவியுள்ள தப்புப் பாடங்கள் ஒன்றா இரண்டா? அபரிமிதம். படிப்பில்லாதவர்கள் சொல்லுகிறார்களென்பதில் ஆச்சரியமில்லை. படித்தவர்களுங்கூட ஆராய்ச்சியின்றியே சொல்லி வருவதுதான் ஆச்சரியம்.

எம்பெருமானாரிடம் சில கேள்விகள்

முனைவர் பூமா வேங்கடக்ருஷ்ணன்

வைணவன்: உடையவரே! தேவரீரிடம் பல ஸந்தேகங்களைக் கேட்கவேண்டும் என்று நெடுநாளாகக் காத்திருக்கிறேன். இவற்றுக்கு எல்லாம் தேவரீர்தான் பதில் சொல்ல வேண்டும்.

எம்பெருமானார்: பீடிகையெல்லாம் மிகவும் பலமாக இருக்கிறதே! என்ன கேள்வி கேட்கப் போகிறாயோ தெரிய வில்லையே! ஒரு நிமிடம் இரு, உன் மனத்தை திருப்திப்படுத்தும் வகையில் நான் பதில் அளிக்கும்படி கிருபை செய்தருள வேண்டும் என்று முதலில் எம்பெருமானைப் பிரார்த்தித்துக் கொள்கிறேன். பிறகு உன் கேள்விக் கணைகளைத் தொடுப்பாயாக. ஆமாம் எந்த விஷயத்தில் உனக்கு ஸந்தேஹம்? ஸ்ரீபாஷ்யத்திலா, கீதார்த்த ஸங்க்ரஹத்திலா?

வைணவன்: முதலில் தேவரீர் எழுதிய நூல்களைப் பற்றியே எனக்குச் சில சந்தேகங்கள் இருக்கின்றன.

எம்பெருமானார்: பரவாயில்லையே. நான் எழுதின நூல்களை எல்லாம் வாசித்துவிட்டு நன்றாகப் புரிந்து கொண்டு அதில் சந்தேகமும் கேட்க ஒருவன் இருக்கிறான் என்றால் அதுவே எனக்குச் சந்தோஷமாக இருக்கிறது.

வைணவன்: நாசமாப் போச்சு. தேவரீரது நூல்களை யார் ஓய் படித்தார்கள்? தேவரீர் எழுதிய ஒன்பது கிரந்தமும் எனக்குப் புரியாத வட மொழியிலே அல்லவா அமைந்திருக்கிறது. நான் கேட்க வந்த கேள்வியே வேறு. தேவரீருக்குத் தமிழ் தெரியுமா? தெரியாதா? தேவரீர் ஏன் தமிழில் ஒரு நூல்கூட எழுதவில்லை என்று கேட்கத்தான் வந்தேன். அதற்குள் எதையோ கற்பனை செய்து கொண்டு. . . . .(விலவறச்சிரிக்கிறார் அந்த வைணவர்)

எம்பெருமானார்: போதும் போதும். வார்த்தைகளாலே என்னைக் கொல்லாதே. என்னுடைய நவரத்னமாகிய ஒன்பது நூல்களையும் அறிந்தவனாக நீ இருக்கிறாய் என்று முதலில் சந்தோஷப்பட்டேன். அதிலே மண் விழுந்தது. இப்படிக் கேட்டு என் மனத்தை புண்படுத்திவிட்டீரே!

வைணவன்: தேவரீருடைய மனத்தைப் புண்படுத்துவதற்காக நான் கேட்கவில்லை. ஆராய்ச்சியாளர்கள் என்று தங்களைச் சொல்லிக்கொள்ளும் பலபேர்கள் சொல்லிக் கொண்டிருப்பதைத்தான் நான் கேட்டேன். இதற்கே இப்படி வருத்தப்படுகிறதே, இன்னும் அவர்கள் சொல்வதைக் கேட்டால் தேவரீர் என்ன கூறுமோ தெரியவில்லை.

எம்பெருமானார்: அப்படி என்னதான் அவர்கள் கூறிவிடப்போகிறார்கள்?

வைணவன்: தேவரீருக்கு திவ்வியப் பிரபந்தங்களே தெரியாது என்று கூடக் கூறுகிறனர்.

எம்பெருமானார்: (மிகவும் மனம் நொந்து வார்த்தைகள் வெளியே வராமல் துக்கம் தொண்டையை அடைக்க) எனக்குத் திவ்யபிரபந்தம் தெரியாது என்று சொல்கிறார்களா? இது என்ன வெட்கக்கேடு? ஏற்கனவே புண்பட்ட நெஞ்சில் புளியைக் குறந்து விட்டால், என்ன வேதனை ஏற்படுமோ அந்த வேதனை எனக்கு ஏற்படுகிறது.

வைணவன்: எம்பெருமானாரே! தேவரீர் கலங்குவதைப் பார்த்தால் கல்நெஞ்சுக்காரனான அடியேனுக்கும் உடல் நடுங்குகிறதே! உண்மையில் உம்மைப்பற்றி நான் இப்படியெல்லாம் நினைக்க வில்லை. ஆனால் இந்த உலகத்தவர்கள் அடியேனிடத்தில் இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்கும்போது பதில் சொல்லத் தெரியாமல் திகைத்து நின்றேன். தேவரீருக்கு ஏற்பட்ட ஸந்தேகங்களுக்கெல்லாம் திருக்கச்சிநம்பிகள் மூலமாகத் தேவப்பெருமாளிடமிருந்து பதிலைப் பெற்றுக் கொண்டதுபோல அடியேனும் பதில் பெறவேண்டும் என்று ஆசைப்பட்டு தேவரீரை மனத்திலே நன்றாக தியானம் செய்து கொண்டேன்.

என்னுடைய கள்ளமான காதலைக் கண்டும் தேவரீர் அடியேனுக்குக் காட்சி கொடுத்தீர். அதனால் அடியேனும் உம்மைப்போல கேள்விகள் கேட்டு தெளிவுபெற ஆசைப்பட்டேன். ஆனால் அடியேனுடைய வார்த்தைகள் தேவரீரை இந்த அளவுக்குப் புண்படுத்தும் என்று தெரியாமல் கேட்டுவிட்டேன். அடியேனை க்ஷமித்தருள வேண்டும்.இதற்குவிடை தெரியாவிட்டாலும் பரவாயில்லை. இனி அடியேன் எந்தக் கேள்வியும் உம்மிடத்தில் கேட்கப் போவதில்லை. (எம்பெருமானார் மனத்தை புண்படுத்தி விட்டதற்காக வைணவர் அழுகிறார்)

எம்பெருமானார்: பரவாயில்லையப்பா! என்னைப் பற்றி நீ தவறாக நினைக்கவில்லை என்பதை நான் அறிவேன். ஊரார்கள் என்னைப் பற்றி தவறாகப் பேசுவதைப் பார்த்துப் பொறுக்க மாட்டாமல் தானே கேள்வியைக் கேட்டாய். பதில் சொல்கிறேன் கேள். எனக்குத் தமிழ் தெரியாதா என்று தானே கேட்டாய். நான் எழுதின கிரந்தங்கள் எல்லாம் வடமொழியிலேயே அமைந்திருப்பதால் தான் இந்த ஸந்தேஹம் எல்லோருக்கும் ஏற்படுகிறது. ஆனால், என் காலத்திலேயே வாழ்ந்தவரான திருவரங்கத்து அமுதனார் என்னைப் பற்றி இராமானுச நூற்றந்தாதியில் "சொல்லார் தமிழ் ஒரு மூன்றும் . . . . . யாவும் தெரிந்தவன்" என்று பாடியிருப்பது உனக்குத் தெரியாதா?

வைணவன்: அது எனக்குத் தெரியும். ஆனால் தேவரீர் தமிழில் ஒரு நூலும் அருளிச் செய்யாததால் சிலர் அப்படிக் கூறுகிறார்கள். ஆமாம். தேவரீர் ஏன் எல்லா நூல்களையும் வடமொழியிலேயே அருளிச் செய்துள்ளது?

எம்பெருமானார்: அப்பா! நான் வாழ்ந்த காலத்தில் வடமொழிதான் இந்த தேசத்தின் பொது மொழியாக இருந்தது. அந்த மொழியில் எழுதினால்தான் மிக அதிகமானவர்கள் அவற்றை வாசிப்பார்கள். மேலும் எனக்கு முன்னால் அத்வைத மதத்தைப் பரப்பியவர்களும் வடமொழியில்தான் நூல்களை எழுதியிருந்தனர். அவர்களையெல்லாம் கண்டித்து விசிஷ்டாத்வைத மதத்தை நிலை நாட்டும் வண்ணம் நான் நூல்களை எழுதும்போது அவர்களுக்குப் புரிந்த மொழியில்தானே எழுதவேண்டும்! மேலும் வடமொழியில் அமைந்த பிரம்மசூத்ரம், உபநிஷத்துக்கள், பகவத்கீதை ஆகிய நூல்களுக்கெல்லாம் வேதாந்த அடிப்படையில் விளக்கங்கள் எழுதும்போது வடமொழியில்தானே எழுதமுடியும்? இக்காரணங்களால்தான் நான் என்னுடைய நூல்களையெல்லாம் வடமொழியில் எழுதினேன். ஆனால் அப்படி விளக்கங்கள் எழுதும்போதும், ஆழ்வார்கள் அருளிச்செய்த திவ்வியப்பிரபந்தங்களின் துணைகொண்டுதான் விளக்கங்களை எழுதினேன். இதை அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்கூட ஆசார்ய ஹ்ருதயம் என்ற நூலில் "பாஷ்யகாரர் இதுகொண்டு சூத்ரவாக்யங்கள்" ஒருங்கவிடுவர் என்று கூறியிருக்கிறாரே!

வைணவன்: வடமொழியில் அமைந்த வேதாந்த நூல்களுக்கு விளக்கத்தை வடமொழியில்தான் எழுதவேண்டும் என்று கூறினீர். அதுவரையில் சரிதான். ஆனால், ஆழ்வார்களுடைய திவ்வியப் பிரபந்தங்கள் உமக்குத் தெரியாது என்று கூறுபவர்களுக்கு நீர் இன்னும் பதில் சொல்ல வில்லையே! ஆழ்வார்களுடைய அருளிச்செயலின் துணைகொண்டே உம்முடைய நூல்களை அருளிச்செய்ததாகக் கூறும் தேவரீர், அந்த அருளிச்செயல்களுக்கு முக்கியமாகத் திருசவாய்மொழிக்கு ஏன் ஒரு வியாக்கியானம்கூட எழுதவில்லை?

எம்பெருமானார்: நியாயமான கேள்வி தான். ஆனால் நான் திருவாய்மொழிக்கு உரை எழுதினால் அதுவே முடிந்த கருத்தாய் விடும் என்பதாலும், பிறகு யாரும் அதற்கு வியாக்கியானம் எழுத முன்வரமாட்டார்கள் என்பதாலும், அதனால் மேலே மேலே வியாக்கியானங்கள் ஏற்படாமலே போய்விடும் என்பதாலும் தான் நான் ஒரு உரையும் எழுதவில்லை. அதனால்தான் நான் எழுதாமல் என்னுடைய அபிமான சிஷ்யனான திருக்குருகைப் பிரான் பிள்ளானை வியாக்கியானம் எழுதும்படி நியமித்தேன். அவரும் ஆறாயிரப்படி வியாக்கியானம் எழுதினார். இதை மணவாளமாமுனிகளும் "திருக்குருகைப் பிரான் பிள்ளான் எதிராசர் பேரருளால் மாறன் மறைப் பொருளை அன்று உரைத்தது இன்பமிகும் ஆறாயிரம்" என்று குறிப்பிட்டுள்ளார். ஒரு முக்கியமான விஷயம். திருவாய்மொழியை நான் திருமாலையாண்டானிடம் காலக்ஷேபம் கேட்டது பற்றியும் அப்போது பல பல விளக்கங்களை நான் கூறியது பற்றியும் திருவாய்மொழி வியாக்கியானங்களில் பல இடங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளனவே. கீதாசார்யன் ஆசிரியர் "வாழ்வும்

வாக்கும்'' என்ற நூலில் இதுபற்றி விரிவாக எடுத்துக் காட்டியுள்ளாரே. அப்படியிருக்கும்போது கூடவா எனக்குத் திருவாய்மொழி தெரியுமா என்று இப்படி ஒரு ஸந்தேஹம்?

வைணவன்: அதெல்லாம் சரிதான். ஆனால் தேவரீர் நேராகத் திவ்வியப்பிரபந்தங் களைப் பற்றி ஒன்றும் அருளிச்செய்யவில்லையே என்றுதான் சிலர் கேட்கிறார்கள்.

எம்பெருமானார்: நான் நேரடியாக ஒன்றும் அருளிச்செய்யாவிட்டாலும் எனக்குத் திவ்வியப் பிரபந்தங்களின்மீதுள்ள ஈடுபாட்டை என்னுடைய காலத்திலேயே வாழ்ந்தவர்களான சீடர்கள் பலர் குறிப்பிட்டிருக்கிறார்களே! அமுதனா ருடைய இராமானுசநூற்றந்தாதி முழுவதும் எனக்கு ஆழ்வார்களிடத்தும், திவ்யப்பிரபந்தங்களிடத்தும் உள்ள ஈடுபாட்டைத் தானே குறிக்கின்றது. திருவாய்மொழியை வளர்த்த இதத்தாய் என்றுதானே என்னைப்பற்றி தனியனில் குறிப்பிடப் பெற்றுள்ளது. இதெல்லாம் தவிர இன்னொரு விஷயம். அடியேனுக்குத் திவ்யப் பிரபந்தத்தில் உள்ள ஈடுபாட்டைப் பற்றித் திருவிருத்தத்தின் 99ம் பாசுரத்தின் வியாக்கியானத் தில் பெரியவாச்சான் பிள்ளை கூறியுள்ளது உனக்குத் தெரியாதா?

வைணவன்: அடியேன் நன்கு அறிவேன். அப்படியே அதைக் கூறுகிறறேன். ''**எம்பெருமானார் பகலெல்லாம் ஸ்ரீபாஷ்யத்தில் ஈடுபட்டவராக இருப்பர். இரவு பாலமுது செய்த பிறகு கட்டிலிலே ஏறியருளினால் (வடுகநம்பியை) ''சந்தை சொல்ல வாராயோ?'' என்று அழைப்பராம். முதல் சந்தை சொல்லிக் கொடுக்கும் போதே பாசுரத்தில் மிகவும் ஈடுபட்டுப் புளகிதராக ஆவர். இரண்டாவது முறை சொல்லும் போது நெஞ்சு உடைகுலைப் பட்டு சிதிலராக ஆகி விடுவர். ஏதேனும் பாசுரத்தின் பொருளை நினைத்து ஈடுபட்டு விட்டாரானால் நாலிரண்டு (பல) உத்திரீயங்ககள் (மேலாடைகள்) கொண்டு துடைக்குமளவுக்கு எம்பெருமானாருக்குக் கண்ணீர் வெள்ளம் பெருகும்.**'' இவ்வளவு ஈடுபாடு உள்ள தேவரீர் திவ்யப்ரபந்தம் பற்றி ஒன்றுமே அருளிச் செய்யவில்லை என்று சிலர் பேசும்போது அவர்களுடைய அறியாமையை நினைத்துப் பரிதாபம் தான் ஏற்படுகிறது.

எம்பெருமானார்: சரி, உம்முடைய சந்தேகம் எல்லாம் தீர்ந்துவிட்டதல்லவா? இனி நான் போகலாமா?

வைணவன்: ஸ்வாமீ இதுவரை கேட்டவை என்னுடைய ஸந்தேகங்கள் அல்ல. பிறர் கூறுவதைத்தான் நான் கேட்டேன். அதேபோல் இன்னும் கேட்கவேண்டிய கேள்விகள் பல உள்ளன. அவற்றுக்கும் தேவரீர் பதில் அருளிச்செய்ய வேண்டும்.

எம்பெருமானார்: சரி கேள். என்னால் முடிந்தவரை சொல்கிறேன்.

வைணவன்: தேவரீர் திருக்கோட்டியூர் நம்பியிடம் பதினெட்டு முறை அலைந்து திரிந்து ஸம்பாதித்த திருமந்திரத்தினுடைய அர்த்தத்தை, அவருடைய ஆணையையும் மீறித் திருக்கோட்டியூர் கோபுரத்தின் மேலே ஏறிச் சென்று தெருவில் போவோர் வருவோரையெல்லாம் கூவி அழைத்து, எல்லோரும் அறியும் படி வாரி வழங்கி விட்டதாக எல்லோரும் கூறுகிறார்களே? இப்படி தேவரீர் செய்தது உண்மைதானா?

எம்பெருமானார்: ஐயோ இது என்ன அபத்தமான பேச்சு! திருக்கோட்டியூர்நம்பிடம் அர்த்தங்களை நான் கேட்கச் சென்றபோது அவ்வூரில் இருந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் பலர் என்னிடம் வந்து ''தேவரீருக்கே இவ்வளவு சிரமங்களுக்குப் பிறகுதான் அர்த்தங்கள் கிடைக்கும் என்றால், எங்களுக்கெல்லாம் எங்கே கிடைக்கப் போகிறது? ஒருவேளை தேவரீருக்கு அர்த்தங்கள் கிடைத்தால் எங்களுக்கும் அருளிச் செய்ய வேண்டும்'' என்று ஆசையுடன் வேண்டிக் கொண்டார்கள். திருக்கோட்டியூர் நம்பி எனக்கு திருமந்த்ர அர்த்தங்களை உபதேசித்தவுடன், என்னிடம் ஆசையுடன் கேட்டவர்களை மட்டும் அழைத்துக் கொண்டு திருக்கோட்டியூர் அஷ்டாங்க விமானத்தின்மீது சென்று அங்குள்ள ஏகாந்தமான இடத்தில் அவர்களுக்கெல்லாம் அந்த அர்த்தங்களை உபதேசித்தேன். நான் ஒருவன் நரகம் போனாலும், இவ்விஷயத்தில் ஆசை உடையவர்கள் மோக்ஷம் இடையவேண்டும் என்று எண்ணி அவர்களுக்கு உபதேசித்தது உண்மைதான். அதற்காக நான் கண்டவர்களுக்கெல்லாம் உபதேசித்துவிட்டேன் என்று

அர்த்தமா? இன்றும் நீ போய் திருக்கோட்டியூர் விமானத்தின் மேலே ஏறி சேவித்துவிட்டு வா. அங்கே மிகவும் ஏகாந்தமான இடம் இருக்கிறது. அந்த இடத்தில் உட்கார்ந்து திருமந்திரத்தினுடைய அர்த்தத்தை அறியவேண்டும் என்று ஆசைப்பட்டவர்களான சிலருக்கு மட்டுமே அதனை நான் உபதேசித்தேன். திருமந்திரத்தி னுடைய சீர்மைக்குப் போரும்படி ப்ரேமத்தோடே பேணி அநுஸந்திக்க வேணும் என்பது எனக்குத் தெரியாதா? மேலும் பொறுமையாக அமர்ந்து காலக்ஷேபம் கேட்டாலே புரிவது மிகவும் கடினமாக உள்ள திருமந்திர அர்த்தங்களை நான் கோபுரத்தின் மேல் ஏறி வாரி இறைத்தால் யாருக்குப் புரிந்திருக்கும்? நான் ஒருபோதும் அப்படிச் செய்யவில்லை.

வைணவன்: ஆனால், இந்தச் சரித்திரத்தை எடுத்துக் கூறுகிற ஆறாயிரப்படி குருபரம்பரா ப்ரபாவத்தில், இப்போது தேவரீர் கூறிய இவ்வளவு விவரங்கள் அதில் இருப்பதாகத் தெரியவில்லையே. ஒருவேளை அதனால்தான் அப்படிச் சிலர் கூறுகிறார்களோ?

எம்பெருமானார்: ஆனால், அதே ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவத்தில், திருக்கோட்டியூர் நம்பி எனக்கு மிகவும் உபதேசித்த சரமச்லோகார்த்தத்தை கூரத்தாழ்வானுக்கே கூட ஒரு மாதம் உபவாசம் இருந்தபிறகுதான் உபதேசித்தேன் என்றும், முதலியாண்டான் ஆறு மாதம் திருகோட்டியூர் நம்பியிடம் கைங்கர்யம் புரிந்து வந்த பிறகுதான் உபதேசித்தேன் என்றும் கூறப்பட்டுள்ளதே. இதை யெல்லாம் ஒருவரும் கவனத்தில் கொள்ளமாட்டேன் என்கிறார்களே! மணவாளமாமுனிகளும் ‘‘பாருலகில் ஆசை உடையோர்க்கெல்லாம் ஆரியர்காள் கூறும் என்று பேசி வரம்பறுத்தார்’’ என்று கூறியுள்ளதுபோல, திருமந்த்ரார்த்தத்தை ஆசை உடையவர்களுக்குத் தான் உபதேசித்தேனே தவிர, கண்டவர்களுக்கும் நான் உபதேசிக்கவில்லை.

வைணவன்: மற்றொரு விஷயம். ஜாதிகளே கிடையாது என்றும் ஜாதிகளை எல்லாம் தேவரீர் ஒழித்துவிட்டதாகக் கூறுகிறார்களே! இதன் உண்மைதான் என்ன?

எம்பெருமானார்: குறிப்பிட்ட ஜாதிகளில் பிறந்தவர்கள்தான் மோக்ஷத்தை அடையமுடியும் என்று பலர் கூறிக்கொண்டிருந்தனர். ஆனால் சரணாகதி நெறி என்பது எல்லோருக்கும் உரியது ஆகையால், சரணாகதி நெறியால் மோக்ஷத்தை அடைவதற்கு ஜாதி ஒரு தடை அல்ல என்றுதான் நான் கூறியிருக்கிறேன். எல்லா ஜாதியினரும் மட்டுமல்ல, எல்லா உயிரினங்களுமே மோக்ஷத்தை அடையமுடியும் என்பதுதான் ஸ்ரீவைஷ்ணவத்தின் அடிப்படை என்பதை வலியுறுத்தினேன். ஆனால் அதே சமயத்தில் அவரவர்க்குரிய தர்மங்களை அவரவர்கள் பின்பற்றியே தீரவேண்டும் என்றும் நான் கூறியிருக்கிறேன்.

வைணவன்: திருநாராயணபுரத்தில் உள்ள கோயிலுக்கு, திருக்குலத்தார் என்று பெயரிட்டு தாழ்குலத்தவர்களையும் ஆலயப் பிரவேசம் செய்தாக எல்லோரும் கூறுகிறார்களே அது உண்மையா?

எம்பெருமானார்: அதுவா? நான் அந்த திவ்யக்ஷேத்திரத்தை நன்றாகப் புதுப்பிக்க புகுந்த காலத்தில், தாழ்குலத்தார் பேருதவிகள் புரிந்தனர். அவர்களுடைய உதவி இல்லாவிட்டால், அந்த க்ஷேத்திரத்தை இழக்கும்படியாக ஒரு நிலைமை ஏற்பட்டது. அப்படிப்பட்ட பேருதவிக்கு ஒரு கைம்மாறு செய்ய எண்ணினேன். அக்காலத்தில் தாழ்குலத்தவர்கள் ஊருக்குள்ளேயே வரமாட்டார்கள். ஆனால் நான் பரம வைணவர் களான அவர்களுக்குத் திருக் குலத்தார்கள் என்று பெயரிட்டு, ஒரு குறிப்பிட்ட ஒரு காலத்தில், கோயிலுக்கு முன்னால் ஒரு குறிப்பிட்ட ஒரு இடத்தில் இருந்து கொண்டு பெருமாளை சேவிக்கும்படி ஏற்பாடு செய்தேன். இப்போதும் வைரமுடி முடிந்த மூன்று நாட்களுக்கு அந்த திருக்குலத்தார், கல்யாணிபுஷ்கரிணியில் நீராடி, வ்ரதமிருந்து, கோயிலின் த்வஜஸ்தம்பத்தின் அடியிலேயே நின்று பெருமாளை சேவித்து விட்டுச் செல்வதைக் கண்கூடாகக் காணலாம்.

வைணவன்: என்ன இருந்தாலும் தேவரீருடைய பரந்த திருவுள்ளம் வேறு யாருக்கும் வராது. இன்னும் பல சந்தேகங்கள் அடியேனிடம் இருந்தாலும், இப்போது நேரமாகிவிட்டது. மற்றொருமுறை அவற்றை தேவரீரிடம் கேட்கிறேன். அடியேன் கேட்ட கேள்விகளில் ஏதேனும் தவறு இருந்தால், அடியேன் தேவரீரிடம் அபசாரப்பட்டிருந்தால் க்ஷமித்தருளவேணும். அடியேனுடைய ஸந்தேகங்களுக்கெல்லாம் பதில் அருளி அடியேனுக்கு மனத்தெளிவை உண்டாக்கியதற்குத் தலையல்லால் கைம்மாறிலேன்.

ஸ்ரீராமநவமியும் புனர்வசுவும்

டாக்டர் ஜயஸ்ரீ ஸாரநாதன்

சித்திரை உத்தர நக்ஷத்திரத்தில் சீதா கல்யாணம்

அங்கண் நெடுமதிள் புடைசூழ் அயோத்தி என்னும் அணிநகரத்தின் குல விளக்கான ஸ்ரீராமசந்திர மூர்த்தி, செவ்வரி கரு நெடுங்கண்ணாளான சீதையை மணம் புரிந்தது உத்தர நக்ஷத்திரத்தில் என்பதை வால்மீகியே குறிப்பிட்டுள்ளார். இராமாயணத்தில் இந்த விவரம் இரண்டு இடங்களில் வருகிறது. இராமன் வில்லை முறித்தவுடன், மணம் பேச தசரதனுக்கு அழைப்பு விடப்பட்டு, தசரதன், தனது பந்துக்கள், மற்றும் ரிஷிகளுடனும் மிதிலைக்கு வந்து சேர்கிறார். இரண்டு குடும்பப் பரம்பரைப் பெருமைகளும் சொல்லப்பட்ட பிறகு, ஜனக மஹாராஜா, அன்றைய தினம் மக நக்ஷத்திரம் என்றும், அன்றிலிருந்து மூன்றாம் நாள் பூரம் முடிந்து அதற்குப் பிறகு உத்தர நக்ஷத்திரம் வரும் போது, அந்த நக்ஷத்திரத்தில் சீதா கல்யாணம் செய்யலாம் என்றும் சொல்கிறார் (வா.இரா: 1–71–24).

இதே விவரம், பரத, சத்ருக்னருக்கும், ஜனகரது தம்பி குசத்வஜனது மகள்களுக்கும் விவாஹம் செய்யலாம் என்று விஸ்வாமித்ரர் சொன்னவுடன், இராம, இலக்ஷ்மணாதிகளுக்கு விவாகம் செய்யும் அதே நாளில் இவர்களது திருமணத்தையும் செய்துவிடலாம் என்று ஜனகர் ஆமோதிக்கிறார். அப்பொழுது சொல்கிறார், பூரமும், உத்தரமும் ஒன்றாகச் சேர்ந்து வரும் நாளில், உத்தர நக்ஷத்திரத்தில் விவாஹம் செய்வது மிகவும் சிறந்தது என்று பெரியோர்கள் சொல்வார்கள் என்கிறார் (வா.இரா: 1–72–13). எனவே உத்தர நக்ஷத்திரமே சீதா கல்யாணம் ஆன தினம் என்பது உறுதியாகிறது. அந்த தினத்தில் பொழுது விடியும் நேரத்தில் பூரமும், அதற்குச் சிறிது நேரத்தில் உத்தரமும் வந்துள்ளது என்றும் தெரிகிறது. அது எந்த மாதத்தில் வருகிறது? பலரும், பங்குனி உத்தரமே சீதாதேவியின் கல்யாண நாள் என்று நினைக்கிறோம். ஆனால், இராமாயண விவரங்களை ஆராயும்போது, அது பங்குனி உத்தரமல்ல, சித்திரை உத்தரம் என்றே தெரிகிறது. அதைப் பற்றிய ஆய்வே இந்தக் கட்டுரை.

வனவாசத்தின் போது இராமன் வயது.

இராமனுக்கும், சீதைக்கும் எப்பொழுது திருமணம் நடந்தது என்பதைத் தெரிந்து கொள்ள இரண்டுவிதமான குறிப்புகளை வால்மீகி தந்துள்ளார். ஒன்று, இராமன் எந்த வயதில் விஸ்வாமித்திரருடன் காட்டுக்குச் சென்றார் என்பது. அந்தப் பயணத்தின் முடிவில்தான் அவர் சீதையைக் கல்யாணம் செய்து கொள்கிறார். இரண்டாவது, வனவாசம் ஆரம்பிக்கும்போது, அவர்கள் இருவரது வயதையும், அவர்களது திருமண ஆண்டுகளையும் சீதையின் வாய்மொழியாகவே வால்மீகி தந்துள்ளார். இவற்றைக் கொண்டு சீதா கல்யாணம் எப்பொழுது நடந்தது என்பதைக் கண்டுபிடிக்க முடிகிறது.

முதலில் வனவாசம் ஆரம்பித்த பொழுது அவர்கள் வயது என்ன என்று பார்ப்போம். இதை ஆரண்ய காண்டத்தில், ஒரு சன்யாசியின் ரூபத்தில் இராவணன் சீதையுடன் பேசிக் கொண்டிருந்தபோது, சீதை சொல்கிறாள். தாங்கள் வனவாசம் ஆரம்பித்தபோது இராமனின் வயது இருபத்தைந்து என்றும், தனது வயது பதினெட்டு என்றும் கூறுகிறாள். (வா.இரா: 3–47–10). அவர்களுக்கிடையே ஆறு வருட வித்தியாசம் இருக்கிறது.

அவர்களுக்கு எப்பொழுது திருமணம் நடந்தது என்பது, அவள் அசோகவனத்தில் அனுமனிடம் சொல்லும் ஒரு விவரத்தின் மூலம் தெரிய வருகிறது. திருமணத்திற்குப் பிறகு பன்னிரெண்டு

ஆண்டுகள் இராமன் வீட்டில் தங்கியிருந்ததாகவும், பதிமூன்றாம் ஆண்டில் தசரதர் இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய நிச்சயித்தார் என்றும் சீதை அனுமனிடம் கூறுகிறாள். (வா.இரா: 5–33–17, 18)

இதிலிருந்து, இராமன் வனவாசம் ஆரம்பிக்கும் பொழுது, பன்னிரெண்டு வருட திருமண வாழ்க்கையை நிறைவு செய்து விட்டார் என்று தெரிகிறது. இதில் ஒரு சுவாரஸ்யமான அம்சம் என்னவெனில், இராமனது வயதில் ஒரு வருடம் முடிந்து, அடுத்த வருடம் ஆரம்பிக்கும் போது அவர் வனவாசம் சென்றார். அவருக்கு முடி சூட்டப்போவதாக, அவரது பிறந்த நாளான சைத்ர புனர்வசு அன்று தசரதன் சொல்கிறார். அதற்கு மறுதினமாக பூச நக்ஷத்திரத்தில் பட்டாபிஷேகம் செய்வதாக தசரதர் அறிவிக்கிறார். அந்த பூச தினத்தன்று இராமன் நாடு கடத்தப்பட்டார்.

சைத்ர புனர்வசு அன்று இராமனது வயதின் அடுத்த வருடம் ஆரம்பித்து விடுகிறது. அந்த அடுத்த வருடத்தின் இரண்டாவது நாளான பூச நக்ஷத்திரன்று அவர் வன வாசம் செல்லவே, சீதை சொன்ன கணக்கில் பதிமூன்றாம் வருடம் என்பது எந்த வருடம் என்ற கேள்வி வருகிறது. சீதை, இராவணனிடம் சொன்ன கணக்கின்படி, தசரதன் அறிவித்த புனர்வசு நாளிலிருந்து, இராமனுடைய 25–ஆவது வயது ஆரம்பித்து விட்டது. அதேசமயம், இராமனுக்குத் திருமணமாகி பன்னிரெண்டு ஆண்டுகள் நிறைவடைந்து, பதிமூன்றாவது ஆண்டு நடந்து கொண்டிருந்தது என்பதும், சீதை தரும் செய்தியாகும்.

கணிணி மூலம், இராமன் பிறந்த வருடம் நமக்குத் தெரியும், அது கி.மு. 5114, பராபவ வருடம். சைத்ர மாதத்தில் அவர் பிறந்துள்ளதால், அதிலிருந்து இருபத்து நான்கு வருடங்களைக் கூட்டினால், பிரமோத வருடம் சைத்ர மாதத்தில் இராமனுக்கு இருபத்து நான்கு வருடங்கள் பூர்த்தியாகின்றன. பிரமோத சைத்ர புனர்வசுவில் அவரது இருபத்தைதாவது வயது ஆரம்பிக்கிறது. அந்த வயது ஆரம்பித்தவுடன் அவர் காட்டுக்குச் செல்ல நேரிடுகிறது. அதாவது பிரமோத வருடம் சைத்ர மாதம் பூச நக்ஷத்திரத்தன்று இராமன் வனவாசத்தை ஆரம்பித்தார். இது கி.மு 5091 ஆம் வருடமாகும்.

ஜென்ம குருவில் வனவாசம்

இந்த வருடம் சரியானதுதானா என்று சோதிக்க வேறு தடயங்களைத் தேடினால், அது குறித்த பழந்தமிழ்ப் பாடல்கள் இருக்கின்றன. முக்கியமாக இராமன் வனவாசம் ஆரம்பித்த நேரத்தில் இராமனது ஜென்ம ராசியில் குரு இருந்தது என்று சொல்லும் பாடல்கள் இருக்கின்றன. உதாரணமாக புலிப்பாணி சித்தர் கூறுகிறார்,

‘‘பாரப்பா யின்னமொன்று பகரக் கேளு
பரமகுரு சென்மத்தில் வந்த போது
கூறப்பா கோதண்டபாணி வீரன்
கொற்றவனே குடியேறிப் போகச் செய்தார்’’ (பாடல்: 187)

குரு பகவான் ஜென்ம இராசிக்கு வந்தபோது, கோதண்டபாணி (இராமர்) (நாட்டைவிட்டு) வெளியேற வேண்டியதாயிற்று. இதனையே சொல்லும் பிரபலமான பாடல் இன்னுமொன்று உள்ளது. வாலி, இராவணன், துரியோதனன் ஆகியோர் வீழ்ந்தபோது அவரவர் ஜாதகத்தில் குரு இருந்த நிலையைச் சொல்லும் இந்தப் பாடல், இராமன், சீதையைப் பற்றியும் சொல்கிறது.

"ஜென்ம இராமர் வனத்திலே சீதையை சிறை வைத்ததும்’’ என்னும் பாடலில் இராமனது ஜென்ம இராசியில் குரு சஞ்சாரம் செய்தபோது, இராமன் வனத்துக்குப் போக வேண்டியதாயிற்று என்றும், சீதையின் ஜென்ம இராசியில் குரு வந்தபோது, அவள் இராவணனால் சிறை வைக்கப்பட்டாள் என்றும் கூறுகிறது.

இராமன் அவதரித்த போது குரு பகவான் ஜென்ம ராசியான கடகத்தில் இருந்தார். குருவானது 12 ஆண்டுகளில் இராசி மண்டலத்தை ஒரு சுற்று சுற்றி முடிக்கிறது. எனவே, 24 ஆண்டுகளில், அது

ஜென்ம இராசிக்குத் திரும்ப வேண்டும். இதைக் கணிணியில் சரி பார்க்கும்போது, பிரமோத வருடத்தின் சைத்ர புனர்பூசத்தில் இராமன் தனது 24 ஆண்டுகளை நிறைவு செய்து 25– ஆவது ஆண்டில் நுழையும் பொழுது, வியாழன் கிரகம் கடகத்தில், அதாவது இராமனது ஜென்ம இராசியில் சாரம் செய்வதைக் கணிணி காட்டியது. இராமனது 25–ஆவது வயது, பிரமோத ஆண்டு, சைத்ர புனர்வசுவில் ஆரம்பித்தது. அது க்ரிகோரியன் தேதியில் டிசம்பர் 17, கி. மு 5091. அதற்கு அடுத்த நாள் வனவாசத்தை ஆரம்பித்தார்.

இப்பொழுது அதிலிருந்து 12 வருடங்களைக் கழித்தால் இராமனது திருமணம் நடந்த வருடம் கிடைக்கும். அதிலும் ஒரு சிறு குழப்பம் வருகிறது. திருமணமான மாதத்தைப் பற்றி குறிப்புகள் இல்லாததால், 12 வருடம் பின்னோக்கிப் பார்க்கும் போது, பிங்கள வருட சைத்ரத்தில் ஆரம்பித்து, காளயுக்தி வருட சைத்ரம் வரை இருந்த ஒரு வருடத்தில் திருமணம் நடந்திருக்கிறது என்று தெரிகிறது. இந்தக் காலக் கட்டத்தில் எந்த மாதத்தில் திருமணம் நடந்தது என்ற கேள்வி வருகிறது. இதைக் கண்டுபிடிக்க இராமன் விஸ்வாமித்திரருடன் வேள்வியைக் காக்க, காட்டுக்குக் கிளம்பின விவரம் கை கொடுக்கிறது.

விஸ்வாமித்திரருடன் கிளம்பியபோது இராமனது வயது

விசுவாமித்திரருடன் சென்றபோது இராமனுக்கு 16 வயதுகூட ஆகவில்லை என்று தசரதர் சொல்வார் (வா.இரா: 1–20–2). ஆனால் ஆரண்ய காண்டத்தில், மாரீசன் இராவணனிடம், இராமன் விஸ்வாமித்திரருடன் வந்து தாடகையை அழித்த விவரங்களைச் சொல்லும் பொழுது, இராமனுக்கு 12 வயது கூட ஆகவில்லை என்றும், மீசை கூட முளைக்காத சிறுவன் என்றும் சொல்கிறான் (வா.இரா: 3–38–6, 14). திருமணமாகி 12 வருடங்கள் கழித்து 25 ஆவது வயதில் இராமன் வனவாசம் சென்றார் என்பதால், மாரீசன் சொல்லும் வயதுதான் ஏற்புடையதாக இருக்கிறது. விஸ்வாமித்திரருடன் இராமன் கிளம்பிய விவரங்களின் அடிப்படையில், இந்த வயதுக் கணக்கை நம்மால் சரிபார்க்க முடிகிறது.

இராமன் விஸ்வாமித்திரருடன் இருந்த நாட்களை வரிசையாகப் பார்ப்போம்.

1–ஆம் நாள்: அயோத்தியை விட்டுக் கிளம்புதல்.

2–ஆம் நாள்: சரயுவுக்கும், கங்கைக்கும் இடைப்பட்ட பகுதியில் இரவு தங்குதல்.

3– ஆம் நாள்– கங்கையைக் கடத்தல். தாடகை இருந்த காட்டுக்கு வந்து, தாடகையை வதம் செய்தல்.

4– ஆம் நாள்: விஸ்வாமித்திரரது ஆஸ்ரமத்தை அடைதல்.

5–ஆம் நாள்: விஸ்வாமித்திரர் வேள்வியை ஆரம்பித்தல்.

ஆறு பகல் மற்றும் ஆறு இரவுகள் விசுவாமித்திரர் மற்றும் பிற முனிவர்கள் செய்த வேத சடங்குகளைக் காப்பதில் கழிந்தன.

10–ஆம் நாள்: வேத வேள்விகள் முடிந்தன.

11–ஆம் நாள்: அனைவரும் மிதிலைக்குக் கிளம்புதல்.

12–ஆம் நாள்; பயணம் தொடர்கிறது. விஸ்வாமித்திரர், கங்கை, கார்த்திகேயன், சகரன் போன்றோர் கதைகளைச் சொல்லுதல்.

13–ஆம் நாள்: கங்கையைக் கடந்து விசாலம் என்ற நகரை அடைதல்.

14–ஆம் நாள்: மிதிலையை அடைதல். அஹல்யா சாப விமோசனம். ஜனகர் வரவேற்பு. சிவ தனுசை முறித்தல். தூதுவர்களை அயோத்திக்கு அனுப்புதல்.

15, 16, 17– ஆம் நாள்: தூதுவர் பயணம்.

18–ஆம் நாள்: தூதுவர், செய்தியை தசரதனுக்குச் சொல்லுதல்.

19, 20, 21, 22 –ஆம் நாள்: தசரதன் குடும்பத்தினர் மிதிலைக்குப் பயணம்.

23–ஆம் நாள்: ஜனகரும், தசரதரும் சந்தித்தல். திருமணப் பேச்சு. தத்தம் பரம்பரையைச் சொல்லுதல்.

அந்த சமயத்தில், ஜனகர் அன்றைய தினம் மக நக்ஷத்திரம் என்கிறார். அன்றிலிருந்து மூன்றாம் நாள், உத்தர பல்குனி நக்ஷத்திரத்தில் இராமனுக்கும், சீதைக்கும் விவாஹம் செய்யலாம் என்கிறார். (வா.இரா: 1–71–24)

அடுத்த சர்கத்தில் ஒரே தினத்தில் பூரமும், உத்தரமும் கூடும் சமயத்தில், உத்தர நக்ஷத்திரத்தில் திருமணம் செய்யலாம் என்கிறார். (வா.இரா: 1–72–13)

இந்த தகவலுடன், திருமணத்தின் போது ராமரின் வயதை ஆராய்வோம். அவர், விஸ்வாமித்திரருடன் கிளம்பும்பொழுது அவரது வயதின் முந்தைய ஆண்டில் இருந்திருக்கிறார். அப்பொழுது அவருக்கு 12 வயது முடியவில்லை (மாரீசன் கூற்றுப்படி). அதற்கு 25 நாள் கழித்து உத்தரத்தில் திருமணம் என்றால், அவரது வயதின் அடுத்த வருடத்துக்கு 20–ஆவது நாளிலேயே புனர்வசு நக்ஷத்திரத்தில் வந்து விடுகிறார். அப்பொழுதுதான் அதிலிருந்து 12 வருடங்கள் கூட்டினால், வனவாசத்தின் பொழுது 24 வயது முடிந்து, 25 ஆரம்பித்தல் சாத்தியமாகும்.

எனவே, இராமனது 12–ஆவது வயது ஆரம்பித்தவுடன் வந்த உத்தர நக்ஷத்திரத்தில் அவருக்குத் திருமணம் ஆகியிருக்கிறது. அவரது வயது ஆரம்பிப்பது சித்திரை. எனவே சித்திரை உத்தர பல்குனியில் அவரது கல்யாணம் நடைபெற்றிருக்கிறது. அது பிங்கள வருடம்.

இதைச் சரி பார்க்க, கணிணியில் பிங்கள வருடம், அதையடுத்து வரும் காளயுக்தி வருடம் என இரண்டு வருடங்களின் சைத்ர மாத உத்தர நக்ஷத்திர அமைப்பைப் பார்த்தால், பிங்கள வருடத்தில்தான், காலை 9–30 மணி வரை பூரம் இருக்கிறது. அதற்குப் பிறகு உத்தரம் வந்து விடுகிறது. ஆனால் காளயுக்தி வருடத்தில் முதல் நாள் மாலை 4 மணி முதல் உத்தரம் ஆரம்பித்து மறுநாளும் தொடர்கிறது. மாலை 4 மணிக்கு மேல் திருமணம் செய்திருக்க மாட்டார்கள்.

மேலும், இராமன் பிறந்த பராபவ வருடத்திலிருந்து கணக்கிட்டால், அவருக்கு 11–ஆவது வயது நடந்து கொண்டிருக்கும் போது, நள வருடத்தில் விஸ்வாமித்திரருடன் கிளம்புகிறார். அது நள வருட பங்குனி. கிளம்பின 14– ஆம் நாளில் சிவ தனுசை முறித்தார். அது பிங்கள சைத்ர அஸ்வினி. அதாவது சிவ தனுசை முறித்தபோது 12 வயது நிரம்பவில்லை. அதற்குப் பிறகுதான் புனர்வசுவில் 12 வயதை முடிக்கிறார்.

சீதையுடன் அவரது கல்யாணம் 12 வயது ஆரம்பித்தவுடன் பிங்கள வருடம் சைத்ர மாதம் உத்தர நக்ஷத்திரத்தில் நடந்தது.

அதிலிருந்து 12 ஆண்டுகள் மண வாழ்க்கை வாழ்ந்தார்கள் என்பதால், சுக்ல வருடம் சைத்ர மாதத்தில் உத்தர நக்ஷத்ரத்துடன் 12 வருடங்கள் பூர்த்தி செய்தார்கள்.

அதற்கு அடுத்த வருடமான பிரமோத வருடம். சுக்ல சைத்ர உத்தரம் முதல், பிரமோத சைத்ர உத்தரம் வரை அவர்களது திருமணத்தின் 13–ஆவது வருடம் நடந்து கொண்டிருந்தது. அந்த வருடத்தில், புனர்வசு நாளன்று பட்டாபிஷேகம் என்று அறிவித்து, மறுநாள் வனவாசத்துக்கு அனுப்பபடுகிறார்.

எனவே, சீதை சொன்னதைப் போல, அவளுக்குத் திருமணமாகி 13–ஆவது வருடம் காட்டுக்கு அனுப்பப்படுகிறாள். அப்பொழுது இராமனுக்கு 24 வயது முடிந்து 25 ஆரம்பித்து விட்டது.

இராமனது வயது, திருமணமான ஆண்டுக் கணக்கு ஆகியவற்றைப் பார்க்கும் போது, சீதா கல்யாணம் பிங்கள வருடம் சைத்ர மாதம், காலை பூரம் இருந்து, பிறகு உத்தரம் ஆரம்பித்த ஜனவரி 12, கி.மு. 5103 என்று தெரிகிறது.

இராமனது உபநயனம்

இராமன் காட்டுக்குச் செல்ல வேண்டும் என்றான பிறகு, அந்தச் செய்தியை, தனது தாய் கௌசல்யைக்கு இராமன் தெரிவிக்கும் இடத்திலும், வயதுக் கணக்கு வருகிறது.

''தச சப்த ச வர்ஷாணி தவ ஜாதஸ்ய ராகவ'' என்று இராமன் பிறந்ததிலிருந்து 17 வருடங்கள் தான் காத்திருந்ததாகக் கௌசல்யை கூறுகிறாள் (வா. இரா: 2–20–45).

இராமன் பிறந்து 17 வருடங்கள் ஆனதுமே, அவன் காட்டுக்கு அனுப்பட்டான் என்றால், பிற விவரங்கள் ஒத்து வரவில்லை. உதாரணமாக, இராமன் திருமணமாகி 12 வருடங்கள் ஆன பிறகு, 13 ஆம் ஆண்டில் காட்டுக்கு அனுப்பப்பட்டான் என்றால், இராமனுக்கு எப்பொழுது திருமணமாகியிருக்கும்? ஐந்து வயதில் திருமணமாகி இருக்கும். சீதைக்கும், இராமனுக்கும் ஏழு வருடங்கள் வித்தியாசம் இருப்பதால், அப்பொழுது சீதை பிறந்தே இருக்க மாட்டாள் என்ற அபத்தமான முடிவைத்தான் அது தருகிறது.

எனவே, 17 வருடம் என்று கௌசல்யை சொன்னது, இரண்டாம் பிறப்பு எனப்படும் உபநயன வயதாக இருக்க வேண்டும். இராமன் 25 ஆவது வயதில் கானகம் செல்லவே, 17 –ஐ அதிலிருந்து கழித்தால், 8–ஆவது வயதில் இராமனுக்கு உபநயனம் செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது.

இதுவரை நாம் கண்டுபிடித்த விவரங்கள்:

இராமன், விஸ்வாமித்திரருடன் காட்டுக்குச் சென்ற பொழுது 10 வயது முடிந்து, 11–ஆம் வயது நடந்து கொண்டிருந்தது. அது நள வருடம். அயோத்தியில் ப்ராண ப்ரதிஷ்டை செய்யப்பட்ட இராமன், அந்த வயதினன்.

இராமன் 11 வயது முடிந்து 12–ஆம் வயது ஆரம்பித்தவுடன் சீதையைத் திருமணம் செய்து கொண்டான். அது பிங்கள வருடம், சைத்ர உத்தரம். கிரிகோரியன் தேதியில் ஜனவரி 12, கி,மு. 5103.

இராமனும், சீதையும் 12 வருட மண வாழ்வை சுக்ல வருடம் சைத்ர உத்தரத்துடன் முடித்தார்கள்.

திருமணமாகி 13–ஆவது வருடத்தில் பிரமோத சைத்ர பூச நக்ஷத்திரத்தன்று, இராமன் வனவாசம் மேற்கொண்டான்.

இந்த விவரங்ககளைப் பார்க்கும் போது, நமக்கு, சீதையின் பிறந்த நக்ஷத்திரத்தைக் கண்டு பிடிக்க முடியுமா என்ற ஆவல் ஏற்படுகிறது. அந்த ஆய்வையும் மேற்கொள்வோம்.

ஸ்ரீராமாயணமும் திருப்பாவையும்

T.C.A. வெங்கடேசன்

3.1 ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி

இப்பாசுரத்திலிருந்து நாம் எடுத்துக் கொள்ளும் வார்த்தையாவது 'உத்தமன்' என்பதாம்.

முதற்பாட்டில் பரமபத நாதனைச் சொன்னார்கள்; இரண்டாம் பாட்டில் திருப்பாற்கடல் நாதனைச் சொன்னார்கள்; இந்தப் பாட்டில் விபவாவதாரமான த்ரிவிக்ரம அவதாரத்தைச் சொல்லுகிறார்கள். குறளாய் வந்து மஹாபலியிடம் மூவடி நிலம் பெற்று அவன் நீர் வார்த்த அளவிலே உலகனத்தையும் அளந்ததை 'ஓங்கி உலகளந்த' என்கிறார்கள்.

ஜகத்ரக்ஷணச் சிந்தையோடு திருப்பாற்கடலிலே சாய்ந்த பின்னும் ஆர்த்தரக்ஷணம் பண்ணக் கிடைக்காமையாலே, இவ்வவதாரம் செய்தான். எல்லையற்ற தன்மையினாலும், அத்யாச்சர்யச் செயல்களைச் செய்வதினாலும், வார்த்தைக்கு அப்பாற்பட்ட வடிவழகினாலும் வாமநாவதாரம் க்ருஷ்ணாவதரத்தை ஒத்திருக்கையால் அதை அநுபவிக்கிறார்கள் என்கிறார் பெரியவாச்சான்பிள்ளை.

அப்படிச் சொல்லும் போது எம்பெருமானை உத்தமன் என்று உரைக்கின்றனர் ஆயர் சிறுமியர்.

உலகில் மனிதர்கள் மூன்று வகையினராய் இருப்பார்கள்: 1. அதமன், 2. மத்யமன், 3. உத்தமன்.

அதமன் என்பான் மற்றவரை துன்புறுத்தி தான் வாழ்ந்திருப்பான். மற்றவர் வாழ்வை அநுமதித்திருப்பவர்கள் அதமனைக் காட்டிலும் சிறிது உயர்ந்தவர் ஆகிறார்கள். மத்யமன் என்பான் நாமும் வாழ வேண்டும், பிறரும் வாழ வேண்டும் என்றிருப்பான். உத்தமாதிகாரியோ தன்னை அழித்தும் பிறரை வாழ வைப்பான்.

தன்னை அழிக்க வந்த வேடன் தன்னிடம் சரண் புகுந்தான் என்று, உயிரைக் கொடுத்து தன் உடலை அவனுக்கே உணவாகக் கொடுத்த புறாவை நினைந்தாரிறே சக்ரவர்த்தித் திருமகனும்:

ச்ரூயதே ஹி கபோதேந சத்ரு: சரணம் ஆகத:

அர்சித: ச யதா ந்யாயம் ஸ்வை: ச மா–ந்ஸைர் நிமந்த்ரித:

நிர்விகாரனான எம்பெருமான் வாமனனாகச் சிறு வடிவைக் கொண்டும், பிறகு த்ரிவிக்ரமனாக பெரு வடிவைக் கொண்டும் வந்தான். "இவ்வுலகம் மூன்றும் உடன் நிறைய சிறு மா மேனி நிமிர்த்த என் செந்தாமரைக் கண் திருக்குறளன்" என்றார் ஆழ்வார். கண்ணாலே முகந்து அநுபவிக்கலாம்படி சிறுத்து, வைலக்ஷண்யத்துக்கு எல்லை இன்றிக்கே இருக்கிற திருமேனி என்பது ஈடு.

"பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராமல் ஆள்கின்ற" உபய விபூதி நாதன் பிறர்க்காக சென்று இரத்தல் ஆகிய தாழ்ந்த செயலைச் செய்தான்

"கள்ளக் குறளாய் மாவலியை வஞ்சித்து உலகம் கைப்படுத்து" என்றும், "கள்ளத்தால் மாவலியை மூவடி மண் கொண்டளந்தான்" என்றும், "கள்ளத்தால் மண் கொண்டு விண்

கடந்த பைங்கழலான்" என்றும், அனைத்தையும் உடையவன் தன் உடைமையையே வஞ்சித்துப் பெற்றான் என்று தன் பேரைக் கெடுத்துக் கொண்டு இந்திரன் முதலான தேவர்களை வாழ வைத்தான். இப்படி செய்தது ஆச்ரிதருக்காக என்பதால் புருஷோத்தமன் ஆகிறான் என்று கொண்டாடுகிறார்கள்.

ஐந்து புருஷர்கள் உள்ளார்கள் என்கிறது சாஸ்த்ரம்: 1. அபுருஷ:, 2. புருஷ:, 3. உத்புருஷ:, 4. உத்தரபுருஷ:, 5. உத்தமபுருஷ:. முதல் நான்கு புருஷர்களுக்கும் தோஷமும் வரம்புகளும் உண்டு. அபுருஷன் ஆகிறது அசித் பதார்த்தம். இதன் ஸ்வரூபம் மாறுபாட்டை அடையும். பத்த ஜீவன் ஆகிறான் புருஷன். முக்தன் ஆகிறான் உத்புருஷன். இவ்விருவருக்கும் ஞான சுருக்கம் விகாசம் ஆகிற ஸ்வபாவ மாற்றம் ஏற்படுகிறது. நித்யன் ஆகிறான் உத்தர புருஷன். இவனுடைய ஞானம் மாறுபடுவதில்லை என்றாலும், அணுமாத்ரமாயும் பரதந்த்ரனாயும் இருக்கிறான். எம்பெருமான் எந்த தோஷமும் தட்டாத வரம்பற்ற உத்தம புருஷனாய் இருக்கிறான்.

தான் பிறருக்கு உபகாரம் செய்தோம் என்றிராமல், இதைச் செய்தது தன் பேறாக என்று இருப்பதால் உத்தமன் ஆகிறான். தன் பேர் கெட அவன் உலகளந்த அன்று சிறிதளவு மண்ணைப் பெற்றுக் கொண்டு ஒழிந்தாரையன்றி புருஷோத்தமனுக்கு பல்லாண்டு பாடினார் யாருமில்லை என்பதால், இன்று அந்தக் குறை தீர 'உத்தமன் பேர் பாடி' என்கிறார்கள். இவ்விடத்தில் 'உத்தமன் பேர்' என்றது திருமந்திரத்தை என்கிறார் பெரியவாச்சான்பிள்ளை.

3.2 ஸ்ரீராமாயண காட்சி

கீழே இரண்டாம் பாசுரத்தின் காட்சியாக தசரத சக்ரவர்த்தி பெருமாளுக்கு பட்டம் கட்ட நிச்சயத்து, அதைத் தன் அவையில் உள்ளோருக்கும் உரைத்தான் என்று பார்த்தோம்.

உத்தம குணங்களுடன் கூடின ஸ்ரீராமனைப் பார்த்த மன்னவன், தன் மந்திரிமார்களுடன் ஆலோசித்து அவருக்கு யுவராஜ பட்டாபிஷேகம் செய்ய முடிவெடுத்தான்:

தம் ஸமீக்ஷ்ய மஹாராஜோ யுக்தம் ஸமுதிதை: சுபை:
நிச்சித்ய ஸசிவை: ஸார்தம் யுவராஜமமந்யத

பெரியோர் அநுமதியுடன் மக்கள் நலனுக்காக ராஜ்ய பாரத்தை பெருமாளிடம் ஒப்படைத்து விட்டு தான் ஓய்வெடுத்துக் கொள்ளப் போவதாகத் தன் ஆசையை அவன் கூறினான்:

ஸோ–அஹம் விச்ரமமிச்சாமி புத்ரம் க்ருத்வா ப்ரஜாஹிதே
ஸந்நிக்ருஷ்டாநிமாந் ஸர்வாநநுமாந்ய த்விஜர்ஷபாந்

அதைக் கேட்டு ஆநந்தித்த ப்ரஜைகள் அவனைப் பார்த்து "ஓ! மன்னவனே. பல்லாயிரக்கணக்கான வருடங்களினால் உனக்கு வயதாகி விட்டது. எனவே ஸ்ரீராமனுக்கு உடனே முடி சூடுவாய்" என்றனர்:

அநேகவர்ஷஸாஹஸ்ரோ வ்ருத்தஸ்த்வமஸி பார்த்திவ
ஸ ராமம் யுவராஜாநமபிஷிஞ்சஸ்வ பார்த்திவம்

"ஹே! கிழவனே. ஓடி போ" என்றனர் அயோத்யாவாசிகள் என்கிறார் நம்பிள்ளை.

அப்படி அவர்கள் பெருமாளை உடனே அரசனாகப் பார்க்க எண்ணியதைக் கேட்டு உள்ளூர மகிழ்ந்தாலும் ஒன்று அறியாதவன் போல அவன் அவர்களைப் பார்த்து "ஏன் அவனை அரசனாகப் பார்க்க நினைக்கிறீர்கள்" என்றும், "நான் தர்ம பரிபாலநம் செய்யவில்லையா?" என்றும் கேட்டான்:

யத் ராகவம் பதிம் இச்சத மயி தர்மேண ப்ருதிவீம் அநுநுசாஸதி

அதற்கு அவர்கள் ஒருமிடறாக "ஹே! ராஜன். உன்னுடைய குமாரன் அநேக கல்யாண குணங்களைக் கொண்டவன்" என்றுரைத்தனர்:

பஹவோ ந்ருப கல்யாணா குணா: புத்ரஸ்ய ஸந்தி தே

ஸ்ரீராமனுடைய கல்யாண குணங்களை முன்னரே ஆராய்ந்து அறிந்தே மன்னவன் பெருமாளுக்கு முடி சூட நினைத்திருந்தாலும், அவைகளை அவர்கள் வாயிலாக அவன் மீண்டும் கேட்டு அநுபவிக்க ஆசைப்படுவதைக் குறிப்பறிந்து, அவர்கள் ஸ்ரீராமனுடைய கல்யாண குணங்களை உரைக்கலாயினர். அப்பொழுது அவர்கள் கூறும் உயிரான வார்த்தை:

வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம் பவதி து:கித:

உத்ஸவேஷு ச ஸர்வேஷு பிதேவ பரிதுஷ்யதி

அதாவது, ஸ்ரீராமன் ஆனவன் பிறர் துன்பம் கண்டால் அதைத் தன் துன்பமாகவே கருதி பெரும் வருத்தம் அடைவான்; அவர்கள் கொண்டாட்டங்களில் அவர்களைப் பெற்றவர்களைப் போலே தான் பெரும் இன்பம் கொள்வான்.

ஓர் ஐதிஹ்யம் காண்மின். எம்பெருமான் பரமபதத்தில் இருக்கும் போதும், இங்கு நித்யர்களும் முக்தர்களும் நம்மை அநுபவித்துக் கொண்டிருப்பது போலேயே ஸம்ஸாரிகளுக்கும் அநுபவிக்கும் அதிகாரம் இருக்க, அத்தை இழந்து கிடக்கின்றார்களே என்று வருந்தி இருப்பான் என்று ஒரு உபந்யாசத்தில் கூறினார் பராசர பட்டர். அந்த உபந்யாசத்தைக் கேட்ட பின், இரு அறிஞர்கள் "எம்பெருமான் ஆநந்தமயன் என்று வேதாந்தம் சொல்லி இருக்க, அவனுக்கு தாழ்ந்த குணமான வருத்தம் ஏற்படும் என்று ஸகல சாஸ்த்ரங்களும் அறிந்த பட்டர் எவ்வாறு சொன்னார்" என்று திருவரங்கத்து வீதியில் பேசிக் கொண்டு சென்றார்கள்.

அதைக் கேட்ட பட்டரின் சிஷ்யனான பண்டிதன் என்பான் ஒருவன் வருத்தமுற்று அதை பட்டரிடம் சென்று கூறினான். பட்டரும் "ஓ! பண்டிதா. என்னிடம் பலகால் காலக்ஷேபம் செய்த நீ அவர்கள் ஐயத்தை நீக்காமல் என்னிடம் ஏன் வந்து சொல்கிறாய்" என்று கேட்டார்.

அதற்கு பண்டிதனும் "இதற்கான பதிலை நான் உரைக்க முடிந்தாலும், அவர்கள் அறிஞர்கள் ஆதலால் ப்ரமாணமின்றி அதை ஒப்புக் கொள்ள மாட்டார்கள். ப்ரமாணங்கள் ஏதும் என் நினைவிற்கு வராததால் தான் நான் ஒன்றும் சொல்லவில்லை" என்றான்.

உடனே பட்டரும் கீழே சொன்ன ஸ்ரீராமாயண நிகழ்ச்சியைக் கூறி, "இப்படி ப்ரஜைகளின் வருத்தம் கண்டு பெருமாள் துன்புறுவது தாழ்ந்த குணமா அல்லது கல்யாண குணமா என்று கேட்டிருக்கலாமே" என்றார். அதாவது, இது கல்யாண குணமே என்றபடி.

மேலும் "அவர்கள் இதிஹாஸமன்றி, சாஸ்த்ரப் ப்ரமாணம் கேட்டால், வேதாந்தம் 'ஏகாகீ ந ரமேத' என்று எல்லோராலும் சூழப்பட்டிருந்தாலும் அவன் தனியனாய் ஆநந்தம் இன்றி இருக்கிறான் என்று சொல்லுகிறதே. தன் ப்ரஜைகள் அனைவரும் தன்னுடன் இல்லையே என்பதால் பலர் சூழ இருந்தாலும் அவன் தன்னைத் தனியனாய் எண்ணி வருந்துகிறான், என்று அதையும் சொல்லியிருக்கலாமே" என்று உரைத்தார்.

"த்ரிபாத் விபூதியிலே பரிபூர்ணாநுபவம் நடவா நிற்க, அது உண்டது உருக்காட்டாதே, தேசாந்தரகதனான புத்ரன் பக்கலிலே பித்ரு ஹ்ருதயம் கிடக்குமா போலே, ஸம்ஸாரிகள் பக்கலிலே திருவுள்ளம் குடிபோய், இவர்களைப் பிரிந்தால் ஆற்றமாட்டாதே" என்றாரிறே பிள்ளை லோகாசார்யரும். இப்படி பிறர் துன்பத்தைப் பொறாது அவர்களைக் காட்டிலும் அதிக துன்பம் அடையும் உத்தம புருஷனாக பெருமாளைக் கூறினர் அயோத்யாவாசிகள் என்று பார்க்கிறோம்.

பிள்ளைலோகாசார்யரின் ரஹஸ்யத்ரய விளக்க நூல்கள்

டாக்டர் கே.எஸ். உஷா

இயல் - 1 தோற்றுவாய்

1.1. வைதிக மதம்:

ஆலோட்ய ஸார்வசாஸ்த்ராணி விசார்ய ச புந: புந:

இதமேகம் ஸுநிஷ்பந்நம் த்யேயோ நாராயண: ஸதா (பார.ஆநு.178–11)

எல்லா சாஸ்திரங்களையும் ஆராய்ந்து மறுபடியும் மறுபடியும் விசாரித்தாலும், 'நாராயணனே எப்போதும் தியானிக்கத்தக்கவன்' என்னும் பொருளே நன்கு தேறி நிற்கும்.

ஸ்ரீமந்நாராயணனால் வேதமானது பிரம்ம தேவனுக்குப் பயிற்றுவிக்கப்பட்டது என்பது மறைகளின் வாயிலாக அறிந்த உண்மையாகும். அந்த வேதத்தை அடிப்படையாகக் கொண்ட மதங்கள் வைதிக மதங்கள் என்று அழைக்கப்படுவன ஆகும். இவை அறம், பொருள், இன்பம், வீடு போன்றவற்றை அடையும் வழிகளை விரிவாகக் காட்டியுள்ளன. வைதிக மதத்தில், எந்த ஒரு உயிரும் இறுதியில் முக்தியடைவது முக்கிய அம்சமாக விளங்குகிறது.

பொதுவாக உலகில் ஒவ்வொரு ஜீவனும் மகிழ்ச்சியாக இருக்க விரும்புகிறான். இதனைச் சாதிப்பதற்குப் பற்பல மதங்களிலும் பல பெரியவர்கள் பல்வேறு வழிகளை வகுத்துக் காட்டியுள்ளனர். உலக வாழ்க்கையில் சில வழிகள் தற்காலிகமான மகிழ்ச்சியைத் தரும்; சில கடினமான முயற்சிகளினால் நாம் தொடர்ந்து மகிழ்ச்சியாக இருக்க முடியும்.

ஆனால் அழியும் சரீர இன்பத்தைத் துறந்து, அழியாத ஆத்ம இன்பம் பெற இரு வழிகள் காட்டப்பட்டுள்ளன. அவை, 1. ஆத்மா தன்னையே நுகர்ந்து இன்புறுவது; 2. ஆத்மா எம்பெருமானை நுகர்ந்து அளவில்லாப் பேரின்பம் அடைவது. இவற்றில் இரண்டாம் வழியைப் பரம மோக்ஷம் என்பர். மேற்கூறிய இன்பமடைய அவரவர்கள் முயற்சியே அவசியம் என்று வேதாந்தங்கள் வலியுறுத்துகின்றன. ஆனால் ராமாநுஜ ஸித்தாந்தமாகிய விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மரபுப்படி, அதைவிடச் சிறந்த வழி அவனை அவனாலேயே அடைந்து இன்புறுவதேயாகும். அதாவது, எம்பெருமான் திருவடிகளையே உபாயமாகக் கொண்டு, அவனையே அடைந்து, அவன் உகந்த பணிகளைச் செய்து, அவன் இன்புறுவது கண்டு அதனாலேயே நாம் இன்பம் அடைவது ஆகும். ஸ்ரீவைஷ்ணவ முன்னோர்கள் இவவழியை நடைமுறைப்படுத்தியும் உபதேசித்தும் உள்ளனர்.

இந்த முக்கியக் குறிக்கோளைப் பற்றி விளக்க வந்தவையே ரஹஸ்யத்ரய நூல்கள் என்பவையாகும். இவற்றில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு ஆதாரம், இவை இறைவனால் சொல்லப்பட்டவை என்பதேயாகும். இவற்றின் முக்கிய நோக்கு – நாம் யார்? எதைச் சென்றடைய வேண்டும்? அதை அடையும் வழி யாது? என்பவற்றை விளக்குவதிலேயே உள்ளது. இம் மூன்றையும் சரியாக ஒரு மதம் சொல்லுமேயானால் அதுவே உயர்ந்த கருத்துடைய மதம் ஆகும். ரஹஸ்யத்ரயம் இம்மூன்றையும் ஐயம் திரிபறக் கூறுவதால் ஸ்ரீவைஷ்ணவத்தின் உயிர்நாடியாகிறது.

1.2. இறைவன் வெளியிட்ட ரஹஸ்யத்ரயம்:

திருமகள் கேள்வனும், எல்லா விருப்பங்களும் அடையப் பெற்றவனும், ஸர்வேச்வரனும் ஆகிய ஸ்ரீமந் நாராயணன், பரமபதத்தில் நித்யஸூரிகளால் சூழப்பட்டு அவர்களால் அருபவிக்கப்பட்டு, எல்லையற்ற ஆனந்தத்துடன் உள்ளான்.

இந்த நித்யஸூரிகள் போலத் தடையற்ற கைங்கர்யம் பண்ணி ஆனந்தத்துடன் இருக்க வேண்டியவர்கள் ஜிவாத்மாக்கள். ஆயினும், ப்ரளய காலத்தில் உடலாலும், அறிவினாலும் மிகச்சுருங்கி நுண்ணியதாக மாறி, உடல் உறுப்புக்கள் எதுவுமின்றி மூலப்ரக்ருதியில், மெழுகில் ஒட்டிய பொன்துகள் போலே, ஒரு சுகத்தையும் பெறாமல் இருந்தனர்; இறகொடிந்த பறவை எப்படிப் பறக்க முடியாமலும் இரை தேடமுடியாமலும் இருக்கிறதோ, அது போல துக்கத்துடனேயே இருந்தனர்.

இவர்களுடைய பரிதாபநிலையை எண்ணி வருந்திய எம்பெருமான் அவர்களுக்குப் புலன், பொறிகளுடன் கூடிய உடலுறுப்புக்களைத் தந்தான். அவற்றின் உதவி கொண்டு சேதநர்கள் உலக விஷயங்களிலே மண்டித்திரியாமல், நல்வழியில் ஒழுகித் தன்னையடைந்து இன்பமுற, வேதங்களைக் கொடுத்தான். மேலும், அதை விளக்கும் ஸ்ம்ருதி, இதிஹாஸம், புராணம் முதலானவற்றைப் பராசர பாராசர்ய வால்மீகி மஹரிஷிகளைக் கொண்டும் தந்து உதவினான். ஆயினும், அவை வலியுறுத்திய வழியை சரிவரப் புரிந்து செயல்பட முடியாமல் இவ்வுலகோர் துன்புற்றனர்.

சாஸ்த்ரஜ்ஞாநம் பஹுக்லேசம் புத்தேச் சலநகாரணம்
உபதேசாத் ஹரிம் புத்த்வா விரமேத் ஸர்வகர்மஸு

என்றொரு ப்ரமாணவசனம். சாஸ்திரங்களாலுண்டாகும் அறிவு மிகுந்த சிரமத்தை உண்டாக்கக் கூடியது; புத்திக்கு (எது பரம் பொருள் என்றறிய முடியாத) கலக்கத்தைக் கொடுக்கக் கூடியது; ஆகையால், உபதேசத்தால் பரமபுருஷனை (உபாயமாக) அறிந்து, (சாஸ்திரஜ்ஞாநத்தை சம்பாதிக்கும்) அவன் எல்லாக் கருமங்களையும் கைவிடக்கடவன் என்பது இதன் பொருள்.

மேலும், சாஸ்திரங்களைக் கற்றுணரப் பல தகுதிகள் தேவைப்பட்டதால் அவ்வகையில் அறிவு பிறந்து ஜீவர்கள் உய்ந்து போவது அரிதாயிருந்தது. இந்த அவல நிலையைக் கண்டு அருள் பொங்கிய எம்பெருமான், எல்லா சாஸ்திரங்களின் ஸாரமான அர்த்தங்களையும் சேதநர்கள் எளிதில் அறிந்து அநுஷ்டிக்கலாம்படி செய்ய எண்ணினான். அதற்காக, ஜீவனின் ஸ்வரூபம், அவன் அடைந்து அனுபவித்து இன்புறும் புருஷார்த்தம் (பலன்), அவன் கைப்பற்ற வேண்டிய உபாயம் (வழி) ஆகியவற்றை உள்ளபடி அறிவிக்கும் திருமந்திரம், த்வயம், சரமச்லோகம் என்னும் மூன்று ரஹஸ்யங்களையும், பிறரைக் கொண்டு செய்யாது, தானே ஆசார்யனாக நின்று வெளியிட்டருளினான். ரஹஸ்யங்கள் மூன்றாகையால் ரஹஸ்யத்ரயம் எனப்பட்டது. 'நிறைமொழிமாந்தர் ஆணையின் கிளக்கும் மறைமொழிதானே மந்திரம் என்ப'' என்று கூறுகிறது தொல்காப்பியம் (பொருளதிகாரம்–செய்யுளியல் சூத்.480) . பொருள்கள் எழுத்துக்களில் அடங்கியுள்ளதால், எழுத்துக்கள் மந்திரங்கள் ஆகின்றன. பல பொருள்கள் (தாத்பர்யங்கள்) சில சொற்களிலே (மொழிகளிலே) மறைவாக வைக்கப்பட்டுள்ளதால் மறைமொழி–ரகசியம் எனப்பட்டது.

1 .3. ரஹஸ்யத்ரயமே ஸ்ரீவைஷ்ணவத்தின் உயிர்நாடி :

'எம்பெருமானார் தரிசனம்' என்று நம்பெருமாள் பேரிட்டு நாட்டி வைத்த ஸ்ரீவைஷ்ணவ விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் ரஹஸ்யத்ரயம் என்னும் இந்த மூன்று ரஹஸ்யங்களில் அடங்கியுள்ளன. இதில் திருமந்திரமும், த்வயமும் வேதத்தில் காணப்படுகின்றன. ஐந்தாவது வேதம் என்று புகழ்பெற்ற மஹாபாரதத்தின் ஸாரமான பகவத்கீதையில் சரமச்லோகம் எனப்படும் மூன்றாவது ரஹஸ்யம் பொலிந்து விளங்குகிறது. வேதவேதாந்தங்களை சாஸ்த்ரம் என்றும், திருமந்திரம் முதலிய ரஹஸ்யங்களைச் சாஸ்திர தாத்பர்யம் என்றும் அருள்வர் ஆன்றோர்.

1.4. 'ரஹஸ்யம்' ஒரு விளக்கம் :

'ரஹஸி பவம் ரஹஸ்யம்' என்பது ரஹஸ்யம் என்ற சொல்லின் விரிவாகும். மனித சஞ்சாரமின்றி நிசப்தமான இடமே ரஹ: எனப்படுகிறது. அவ்விடத்தில் உண்டான சொல்லும் அதன் பொருளும்

ரஹஸ்யங்களாகும். 'சில அர்த்தங்களை ஏகாந்தத்திலே (தனியிடத்திலே) சொல்ல விதிக்கையாலே அவற்றை ரஹஸ்யங்கள் என்கிறது' என்பர் ஆன்றோர். இதன்படி, ஆசாரியன் ஏகாந்தமான இடத்திலே தன்னுடைய சீடனுக்குக் கூறும் விளக்கங்கள் ரஹஸ்யங்கள் எனப்படுகின்றன.

1.5. யார் வைஷ்ணவன்?:

ஒருவன் மனிதனாய் பிறப்பதனாலேயே வைணவன் ஆக மாட்டான். அறிவும் ஒழுக்கமும் நிரம்பி இருக்கக்கூடிய நல்லாசிரியனைப் பற்றி, பஞ்சஸம்ஸ்காரம் எனப்படும் ஐந்து சடங்குகளையும் பெற்ற பிறகே வைணவனாகிறான். (ஸம்ஸ்காரம் என்றால் சுத்தி, திருத்தம் என்று பொருள்.)

பஞ்சஸம்ஸ்காரங்களில் முக்கியமாக மந்திரஸம்ஸ்காரம் ஜ்ஞாந ஜன்மத்தைப் பெற்றுத் தருகிறது. ''மந்தாரம் த்ராயத இதி மந்த்ர:' '' என்பது விரிவு. (மநநம் செய்பவனைக் காப்பதால் 'மந்த்ரம்' எனப்படுகிறது.) இந்த ஸம்ஸ்காரத்தில் ஆசாரியன் உபதேசிக்க, சிஷ்யன் மூன்று ரஹஸ்ய மந்திரங்களையும் பெற்று உச்சரித்து, இவற்றின் பொருளையும் அவவாசாரியனின் மூலமாகவே, அறியப்பெறுகிறான். இப்படி அறிவு பிறப்பதை ஜ்ஞாந ஜன்மம் என்பர். இவற்றினால் அறிவது உடல்–உயிர் வேறுபாடும், இறை–உயிர் ஸம்பந்தமும் ஆகும். ஜீவாத்மா, பரமாத்மா இருவரும் நித்யர்கள். ஆனாலும் ஜீவாத்மாவுக்கு சரீர சம்பந்தத்தைப் பிறப்பு என்றும், அதை விடுவதை இறப்பு என்றும் கூறுகிறோம். இது உண்டாவது ஜீவனின் கர்மம் காரணமாக ஆகும். இவை சாஸ்திரங்களில் தெளிவிக்கப்பட்ட அர்த்தங்கள். நாதமுனிகள் முதலாக நம் ஆசாரியர்கள் அனைவரும் திருவஷ்டாக்ஷர மஹாமந்திர ஜ்ஞாநம் தமக்கு ஏற்பட்ட பின்னரே தம்மைப் பிறந்தவர்களாக எண்ணி, இதைக் கொண்டே காலக்ஷேபம் பண்ணிப் போந்தனர். நாம் பகவானுடைய சொத்து என்ற அறிவு வேரூன்றியிருக்க வேண்டும். இந்த ஜஞாநம் பிறந்த ஸ்ரீவைஷ்ணவனுக்குத் திருமந்திரம் தாய், ஆசார்யன் தந்தை. 'மந்த்ரோ மாதா குரு: பிதா' என்கிற ப்ரமாணமும் ''வித்யை தாயாகப் பெற்று'' என்கிற ஆசார்யஹ்ருதய வரிகளும் நோக்கத்தக்கன. இந்த ஜ்ஞாந ஜன்மமே பிறப்பு என்பது ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் ஒரு முக்கியமான அர்த்தமாகும்.

1.6. ரஹஸ்யத்ரயத்தின் உன்னதத்தன்மை:

ரஹஸ்யத்ரயம் பரமரஹஸ்யமான பொக்கிஷமானவை. இவற்றின் மேன்மை ஆழ்வார்கள் தொடங்கி ஆசார்யர்கள் அளவாக இன்று வரை மிக்க அன்புடன் பேணப்பட்டு வருகின்றது. ஸ்ரீவைஷ்ணவத்வம் என்பது நன்றியுடன் குருபரம்பரையை நினைத்து ரஹஸ்யத்ரயத்தை அநுஸந்திப்பதேயாகும். திருமந்திரம் ஆத்ம தூய்மைக்காகவும், த்வயம் மௌனமாக மனத்துள் அர்த்தத்தை எண்ணிக்கொண்டு ஸ்மரிக்கவும், சரமச்லோகம் த்வயத்தில் கூறிய சரணாகதியைக் கடைபிடிக்கப் பண்ண வேண்டியவைகளை விதிக்குமதாகவும் அமைந்துள்ளன. ஆத்ம–பரமாத்ம சம்பந்தத்தைப் பற்றியுள்ள உண்மைத்தன்மையை அறிய ஊற்றமுடையவர்களுக்கும், குருபரம்பரையில் உள்ள ஆசார்யர்களுக்குத் வணக்கத்தைத் தெரிவிக்க விருப்பமுடையவர்களுக்கும் மட்டுமே ரஹஸ்த்ரய அர்த்தங்கள் அளிக்கப்பட வேண்டியதாகும். தகுந்த அதிகாரிகளாக இல்லாதிருப்பின் அவர்கள் முன் மந்திரங்களைச் சொல்லுவதும் அவைகளைப்பற்றிப் பேசுவதும் தடுக்கப்பட்டதாகும்.

1.7.1. திருமந்திரம்:

''ஓம் நமோ நாராயணாய'' என்பது திருமந்திரமாகும். 'திரு' என்ற சொல் மந்திரத்தின் சிறப்பைக் குறிப்பது. எட்டெழுத்தால் ஆன இதனைப் 'பெரிய திருமந்திரம்', 'திரு அஷ்டாக்ஷரம்', 'மந்திர ராஜம்' எனவும் வழங்குவர். ''எம்பெருமானுக்கே உரியனான நான் (ஆத்மா) எனக்கும் பிறர்க்கும் உரியனல்லன்; ஸர்வசேஷியான நாராயணனுக்கே எல்லா அடிமைகளும் செய்யப் பெறுவேன் ஆகவேணும்'' என்று திருமந்திரம் தெரிவிக்கிறது.

1.7.2. த்வயம் :

'ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே, ஸ்ரீமதே நாராயணாய நம:' என்று இரண்டு வாக்கியங்களை உடையதாகையாலே இதற்குத் த்வயம் என்று திருநாமமாயிற்று. மந்திர ரத்தினம்', என்று வழங்கப்படுவதும் இதுவேயாகும். ''பெரியபிராட்டியாரைப் புருஷகாரமாக முன்னிட்டுக் கொண்டு நாராயணனுடைய திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறேன்; பிராட்டியும் அவனுமான சேர்த்தியில், அவர்களுடைய மகிழ்ச்சிக்காகவே எல்லாக் கைங்கர்யங்களையும் செய்யப்பெறுபவனாக ஆக வேண்டும்'' என்பது த்வயத்தின் பொருள்.

த்வயத்தில் 'ஸ்ரீமத்'; 'ஸ்ரீமதே' என்ற இரண்டு பதங்களாலும் அருளிச் செய்யும் பொருளாவது: முதல் பதத்தால் புருஷகாரமும், அதைச் செய்து கொடுக்கும் பிராட்டிக்கு எம்பெருமானுடன் பிரிவில்லாத தன்மையும்; இரண்டாம் பதத்தால் அடையத்தக்க பேறாகிய கைங்கர்யமும் இருவருமான சேர்த்தியிலேயே என்பதும் ஆகும்.

1.7.3. சரமச்லோகம்:

'ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய மாம் ஏகம் ரணம் வரஜ, அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:' என்பது சரமச்லோகமாககும். இது குருக்ஷேத்ரத்தில் நடந்த பாரத யுத்தகளத்திலே, தேர்த்தட்டிலே, கண்ணன் எம்பெருமான் அர்ஜுனனுக்கு உபதேசித்த கீதையில் **18**ஆம் அத்தியாயத்தில் **66**ஆம் ச்லோகமாக உள்ளது. இது முப்பத்திரண்டு எழுத்துக்களைக் கொண்ட அநுஷ்டுப் என்னும் யாப்பில் அமைந்துள்ளது. அர்ஜுனன் எதிரிகளாய் நின்ற பந்துக்களைக் கொல்வது அதர்மம் என்று அஞ்சினான். அவனுடைய கலக்கத்தைப் போக்க ஆத்மா நித்யமென்றும், மோக்ஷ பலனே புருஷார்த்தம் என்றும் அதை அடையக் கர்மயோகம், ஜ்ஞாநயோகம், பக்தியோகம் முதலானவற்றைக் கண்ணன் உபதேசித்தான். அகைக் கேட்ட பார்த்தன், 'அவை செய்ய அரியவை; பல ஜந்மாந்தரங்களில் பலன் தருபவை. சேதநனுடைய பரதந்திரத் தன்மைக்குச் சேராதவை' என்று சோகித்தான். அவனுடைய சோகம் நீங்க, பின்பற்ற எளியதும், இப்பிறவிலேயே பலன் தருவதும், ஸ்வரூபத்தோடு பொருந்தியதுமான சரணாகதியை இந்த சரமச்லோகத்தாலே அருளிச் செய்தான்.

இதற்கு மேல் உயர்ந்ததான இன்னொரு உபாயமில்லை என்னும்படி, கடைசியான வழியைச் சொல்லுகையாலே இதற்கு சரமச்லோகம் என்று பெயராயிற்று. ''கர்மம், ஜ்ஞாநம், பக்தி போன்ற எல்லாத் தர்மங்களும் (மோக்ஷத்திற்கு) உபாயங்களாகும் என்ற எண்ணத்தைத் துறந்து, (ஸகல தர்மமாக உள்ள) என் ஒருவனையே சரணமாகப் புத்தி பண்ணு; நான், மோக்ஷமடையத் தடையாக இருக்கும் உன்னுடைய தீவினைகள் அனைத்தையும் போக்கி உன்னை விடுவிக்கக் கடவேன்; துயரப்படாதே" என்பதே சரமச்லோகத்தின் பொருள்.

1.8. ரஹஸ்யத்ரயத்தின் உபதேச பரம்பரை:

ரஹஸ்யத்ரயத்தை யார் சொன்னது**?** யார் கேட்டது**?** என்பது பற்றிய விளக்கம் பின்வருமாறு: ரஹஸ்யத்ரயத்துள், முதல் ரஹஸ்யமாகிய திருமந்திரத்தை ஸ்ரீபதரிகாச்ரமத்திலே நாராயணனே ஆசார்யனாய் இருந்து தன் அம்சமான நரனாகிற சிஷ்யனுக்கு உபதேசித்தான்.

த்வயத்தை, ஸ்ரீவிஷ்ணு லோகத்திலே, ஸம்சாரி சேதநர்கள் உய்வடையும் பொருட்டு வினவிய தன் மஹிஷியும் சிஷ்யையுமான பெரியபிராட்டியாருக்கு எம்பெருமான் உபதேசித்தான்.

சரமச்லோகத்தை, திருத்தேர்த்தட்டிலே தன் அடியவனான அர்ஜுனன் விஷயமாக வெளியிட்டான்.

ஆகவே தான் 'லக்ஷ்மீநாத ஸமாரம்பாம்' என்று ஸ்ரீவைஷ்ணவ குருபரம்பரையில் முதலில் திருமாலைக் கூறுகிறார்கள்.

(தொடரும்)

அருளிச்செயல் அமுதம் – 1

திருப்பல்லாண்டு

ஸ்ரீ உ.வே. மண்டயம் அனந்தாண்பிள்ளை லக்ஷ்மீதாதாசார்ய ஸ்வாமி

ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயம் ஒரு சிறந்த சம்பிரதாயமாகும். 'ஒத்தாரும் மிக்காரும் இலையாய மாமாய' என்று பரம்பொருளுக்கு, ஒத்தாரும் மிக்காரும் இல்லாதபடி, இந்த சம்பிரதாயத்திற்கும் ஒத்த சம்பிரதாயம் ஆதல், மிக்க சம்பிரதாயம் ஆதல் உலகத்தில் கிடையாது. இப்படிப்பட்ட ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தின் பெருமைக்கு பல காரணங்கள் உள்ளன. அவைகளில் முக்கியமானவை, பிரமாண தமங்களாக கருதப்படும் திராவிட திவ்வியப் பிரபந்தங்களாகும்.

திராவிட திவ்வியப் பிரபந்தங்கள் நம் முன்னோர்களால் திராவிட வேதமென்றே போற்றப்பட்டன. மற்ற சம்பிரதாயங்களுக்கு இல்லாத இந்தப் பிரமாண வைபவம், ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்துக்கே உள்ளது. ஸ்த்ரீ சூத்ராதிகளும் படிப்பதற்கு உரிமையுடைய திராவிட வேதங்கள், 'மந்த்ர ராஜ' பதத்தால் போற்றப்படுகிற பெரிய திருமந்திரத்தினுடைய அர்த்தத்தை விவரிக்கின்றனவாக, முன்னோர்கள் கண்ட முடிவு. பெரிய திருமந்திரத்தில் 'ஓம்' என்கிற முதல் பதத்தினுடைய அர்த்தத்தை நாலாயிர திவ்வியப் பிரபந்தங்கள் அமைக்கப்பட்டிருக்கிற கிரமத்தில், பல்லாண்டிலிருந்து கண்ணிநுண் சிறுத்தாம்புவரை இருக்கக்கூடிய பிரபந்தங்கள் விவரிக்கின்றனவாகவும்; 'நம:' பத அர்த்தத்தை கண்ணிநுண் சிறுத்தாம்பு விவரிக்கின்றதாகவும்; 'நாராயணாய' என்கிற மூன்றாம் பதத்தினுடைய அர்த்தத்தை மற்ற பிரபந்தங்களெல்லாம் விவரிக்கின்றனவாகவும் பெரியோர்கள் கூறுவார்கள்.

ஸம்ஸ்க்ருத வேதம் தொடங்கும் போது, பிரணவ அனுஸந்தானம் இல்லாமல் தொடங்கமாட்டார்கள். ஸம்ஸ்க்ருத வேதத்தில் உள்ளதுக்கெல்லாம் சுருக்கமான பிரணவத்தினுடைய (ஓம்) ஸ்தானத்தில் உள்ளது திராவிட வேதத்தில், உள்ளதுக்கெல்லாம் சுருக்கமாய் மங்களகரமான 'திருப்பல்லாண்டு' என்கிற இந்த முதல் பிரபந்தமாகும். ஆதலால் தான் விசதவாக்சிகாமணியான மணவாள மாமுனிகள் தம்முடைய உபதேச ரத்தினமாலையில், 'வேதத்துக்கு ஓம் என்னுமதுபோல் உள்ளதுக்கெல்லாம் சுருக்கமாய் தான் மங்களமாதலால் ஆழ்வார்கள் கூறுகலைக்கெல்லாம் ஆதி திருப்பல்லாண்டு ஆனது' என்று பல்லாண்டின் பெருமையைக் கூறுகிறார்.

'ஞானானந்த மயஸ்த்வாத்மா சேஷோஹி பரமாத்மந:' என்று சொல்லும்படி சேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம். சேஷத்வமானது, பரம்பொருளான ச்ரிய: பதியான ஸ்ரீமன் நாராயணனுக்கு அடிமையாக இருப்பது தான். ஒவ்வொரு ஜீவனும் இவ்வுலகத்தில் தன்னுடைய ஸ்வரூபத்தை அறிந்து, அந்த ஸ்வரூபாநுரூபமாக, பரம்பொருளுக்கு ப்ரேம அதிசயத்தாலே மங்களாசாஸனம் செய்வது தான் ஸ்ரீ வைஷ்ணவ ஸ்வரூபம்.

இந்த விஷயத்தை மிக அழகாக காட்டிக் கொடுத்தவர், பெரியாழ்வார் என்றே போற்றப்பட்ட, மற்ற ஆழ்வார்களைக் காட்டிலும் நெடுவாசியுள்ள நம் விஷ்ணுசித்தர். ஆதலால்தான், மணவாளமாமுனிகள் உபதேசரத்தினமாலையில், 'உண்டோ திருப்பல்லாண்டுக்கு ஒப்பதோர்

கலைதான் உண்டோ பெரியாழ்வாருக்கு ஒப்பொருவர்' என்று திருப்பல்லாண்டையும் பெரியாழ்வாரையும் கொண்டாடினார்.

பெரியவர் இளையவரை வாழ்த்துவதுதான் வடமொழியில் மங்களாசாசனம் என்று கூறப்படுகிறது. பெரியாழ்வார், பரம்பொருளான ஸ்ரீமன் நாராயணனை வாழ்த்திப் பாடின மிகச் சிறந்த திவ்வியப் பிரபந்தம் தான் 'திருப்பல்லாண்டு' என்கிற பிரபந்தம். பரதத்வ நிர்ணயம் பண்ணுவதற்காக, பாண்டிய மகாராஜாவின் ஸபைக்குச் சென்று, 'பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று ஈண்டிய சங்கம் எடுத்தூத, வேண்டிய வேதங்கள் ஓதி விரைந்து கிழியறுத்த' பெரியாழ்வார் அருளிச்செய்த பிரதம ப்ரபந்தம் திருப்பல்லாண்டு என்கிற இப்பிரபந்தம்.

பெரிய திருமந்திரத்தில் முதல் பதமான 'ஓம்' என்னும் பதத்தால் விளக்கப்பட்ட, ஜீவாத்ம ஸ்வரூபமான சேஷத்வத்தை (அடிமையை) விவரிக்கின்றது இப்பிரபந்தம் என்று மேலே சொல்லப்பட்டது. அடிமையானவன் தன் ஸ்வாமிக்கு இப்படி மங்களாசாசனம் செய்வது, ஸ்வரூப முரண்பாடானதன்றோ என்கிற ஒரு ஐயம் எழும். வியாக்கியான சக்ரவர்த்தியான பெரியவாச்சான்பிள்ளை, தமது திருப்பல்லாண்டு வியாக்கியானத்திலே இவ்விஷயத்தை மிக விரிவாக விமர்சித்துள்ளார்.

பரதத்வ நிர்ணயம் பண்ணின பெரியாழ்வாரை, யானைமேல் ஏற்றி ஊர்வலமாகக் கொண்டு வரும் பொழுது, பராத்பரனான ஸ்ரீமன் நாராயணன், ஸ்ரீ பூ நீளா ஸமேதனாக ஆகாயத்தில் தோன்றினான். அவனை ஸேவித்தவுடனே பெரியாழ்வார் அவனுடைய வடிவழகில் மயங்கினார். பகவானிடத்தில் அவருக்கிருந்த பிரேமாதிசயத்தினாலே கலங்கினார். காலம் நடையாடுகிற இக்கொடுவுலகத்தில், திவ்ய மங்கள விக்ரஹத்துடன் கூடிய எம்பெருமான் இப்படி ஸேவை சாதிக்கிறானே! இவனுக்கு என்ன தீங்கு வருகிறதோ! என்று மிகவும் அஞ்சினார். அவருக்கு ஏற்பட்ட கலக்கத்தால், தம்மையும் தம்முடைய நன்மையும் மறந்தார். காலம் நடையாடுகிற இத்தேசத்திலே, பகவானுக்கு எந்த ஆபத்தும் வரக்கூடாது என்று 'பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு, பலகோடி நூறாயிரம்.......' என்று பாட ஆரம்பித்தார்.

கலக்கத்தால், காப்பாற்றுகிறவனான பரம்பொருளுக்கு அடிமையாய் இருப்பவன் பல்லாண்டு பாடுவது 'ஸ்வரூப ப்ரயுக்தம்' என்று பெரியவாச்சான்பிள்ளை தம்முடைய வியாக்கியானத்தில் மிகவும் அழகாக நிரூபித்துள்ளார். இறைவனுடைய அழகை ஸேவிக்கும் பொழுது, பிரேமாதிசயத்தினாலே மயங்கி, இந்த அழகுக்கு என்ன தீங்கு வருகிறதோ என்று மங்களாசாஸனம் செய்வது தான் அடியவனுடைய கடமை.

பெரியாழ்வாருடைய பெண்பிள்ளையான ஆண்டாளும் கூட, தன்னுடைய திருப்பாவையின் 24ஆவது பாசுரத்தில், எம்பெருமானுடைய அழகிலே ஈடுபட்டு 'அன்று இவ்வுலக மளந்தாய் அடிபோற்றி, சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல் போற்றி........' என்று காலந்தரத்திலே நிகழ்ந்த அபதானத்துக்கெல்லாம், நிகழ் காலத்திலே பயந்து பல்லாண்டு பாடுகிறாள் அல்லவா! அடிமையானவள் இறைவனிடத்தில் உள்ள பிரேமாதிசயத்திலே அவனுக்குப் பல்லாண்டு பாடுவது இயற்கையானது. பிரேமை பொங்கும் பொழுது காப்பாற்றப்பட வேண்டியவனும் காப்பாற்றுபவனும் என்னும் பாவம் (ரக்ஷ்ய ரக்ஷக பாவம்) மாறாடினாலும் அது ஸ்வரூப ப்ரயுக்தம் தான் என்பது நம்முடைய முன்னோர்கள் கண்ட நிலை.

நினைவில் நிற்பவர்கள்

முன்னுரை

“ஸம்ஸார விஷவ்ருக்ஷஸ்ய த்வே பலே ஹ்யம்ருதோபமே கதாசித் கேசவே பக்தி: தத் பக்தைர்வா ஸமாகம:” (இவ்வுலக வாழ்க்கையாகிற நச்சுமரத்தில் அமுதம் போன்ற இரண்டு பழங்கள் உள்ளன; ஏதோ ஒரு சமயத்தில் பகவான் கேசவனிடத்தில் ஏற்படும் பக்தி ஒன்று, அவனுடைய அடியவர்களிடம் ஏற்படும் தொடர்பு மற்றொன்று) என்று ஒரு பிரமாணம் கூறப்படுகிறது. இந்த ச்லோகத்தில் உள்ள ‘தத் பக்தைர் வா ஸமாகம:’ என்பதற்கு எம்பெருமானார் பொருள் அருளிச்செய்யும்போது, ‘பகவத் பக்தியைக் காட்டிலும் உயர்ந்ததான பாகவதர்களோடு ஏற்படும் தொடர்பே கூடக் கிட்டிவிடும். அதாவது கிடைத்தற்கரியதான அந்த விஷயமும்கூடக் கிட்டிவிடும்’ என்று பொருள் அருளிச்செய்துள்ளார். உண்மையில் அடியேன் விஷயத்தில் அது நன்கு பலித்திருக்கிறது என்றே கூறவேண்டும். இவ்வளவு பெரியவர்களுடன் தொடர்பு ஏற்படும் பாக்யம் அடியேனைத் தவிர வேறு எவருக்கேனும் கிட்டியிருக்குமா என்பது ஸந்தேஹமே. அப்படி ஒரு தொடர்பு ஏற்பட்டதன் காரணமாகத்தான் பொருளல்லாத என்னையும் ஒரு பொருளாக மதிக்கும்படியான பெருமை அடியேனுக்கு ஏற்பட்டுள்ளது. சிறந்த பெரியார்களுடன் தொடர்பாகிய மிகப் பெரிய பேற்றைப் பெற்ற அடியேனுக்கு “யாவர் நிகர் அகல்வானத்தே” என்று பெருமையும் கொள்கிறேன்.

“நள்ளேன் கீழாரோடு உயவேன் உயர்ந்தவரோடல்லால்” என்ற பொய்கையாழ்வார் திருவாக்கின்படி மிக மிக உயர்ந்தவர்களோடு பழகும் வாய்ப்பு சிறு வயதிலேயே அடியேனுக்குக் கிட்டியது எம்பெருமானுடைய நிர்ஹேதுக க்ருபையினாலேயே என்பதில் சிறிதும் ஐயமில்லை.

எண்ணற்ற பெரியவர்களோடு அடியேனுக்குத் தொடர்பு ஏற்பட்டிருந்தாலும் அடியேனுடைய வாழ்க்கையில் முக்கியமான திருப்பங்களை ஏற்படுத்திய சிலரைப் பற்றி எழுதியுள்ளேன். இப்போது இந்நூலில் குறிப்பிடப்பெற்றவர்கள் அனைவருக்கும் இடையே உள்ள ஒரே ஒற்றுமை அவர்கள் அனைவருமே இப்போது இந் நிலவுலகில் இல்லை என்பதுதான். அவர்கள் இவ்வுலகை விட்டு மறைந்து விட்டாலும் அவர்கள் செய்துள்ள உபகாரங்கள் காரணமாக என்றென்றும் அடியேன் நினைவில் உள்ளவர்கள் ஆகையால் ‘நினைவில் நிற்பவர்கள்’ என்ற தலைப்பில் அவர்களைப் பற்றி எழுதியுள்ளேன்.

ஒவ்வொருவரும் அடியேனுக்குச் செய்துள்ள உபகாரங்களைப் பற்றித் தனித்தனி புத்தகங்களே எழுதலாம். ஆயினுமை அவர்கள் அடியேனுக்குச் செய்துள்ள உபகாரங்களில் ஒரு சிலவற்றை மட்டுமே இங்கு எழுதியுள்ளேன்.

‘பெரியார்க்கு ஆட்பட்டக்கால் பெறாத பயன் பெறுமாறு” (திருவாய்மொழி 10–6–10) என்ற நம்மாழ்வாருடைய திருவாக்கின்படி இப்படிப்பட்ட பெரியவர்களுடன் ஏற்பட்ட தொடர்பால் அடியேன் பெறுதற்கரிய பயன்களை பெற்றுள்ளமைக்கு நன்றி தெரிவிக்கும் வண்ணமாகவே அவர்களைப் பற்றி இங்கு எழுதியுள்ளேன்.

– வேங்கடக்ருஷ்ணதாஸன்

1. திருமலை அனந்தாழ்வான்

அடியேனுடைய குல கூடஸ்தரான திருமலை அனந்தாழ்வானுடைய சரித்திரம் எல்லோரும் அறிந்த ஒன்றாகும். இருப்பினும் சிலவற்றை மட்டும் நினைவுகூர்ந்து ஸத்தை பெறுகிறேன்.

திருநாராயணபுர ப்ராந்தத்தில் மண்டயம் ஜில்லாவில் ஸ்ரீரங்கபட்டணத்திற்கு மிக அருகில் சிறுபுதூர் (தற்பொழுதைய கிறங்கூர்) என்கிற கிராமத்தில் அவதரித்தவர் அனந்தாழ்வான். அங்கிருந்து ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளி ஸ்ரீராமானுஜருடைய சிஷ்யரானார். ஆசார்ய நியமனத்தை நிறைவேற்றும்பொருட்டு திருமலைக்கு எழுந்தருளிப் புஷ்பகைங்கர்யங்கள் செய்தார். திருப்பதியில் இளையமண்டயம், காஜல் மண்டயம், சின்ன மண்டயம், திருமண்டயம் ஆகிய அக்ரஹாரங்கள் அனந்தாழ்வானால் ஏற்படுத்தப்பட்டவை என்றும், அவர் தம்முடைய ஊரான மண்டயத்தின் நினைவாகவே அப்பெயர்களைச் சூட்டினார் என்றும் கூறுவர். அதனால் அனந்தாழ்வானே மண்டயம் ஸ்ரீவைஷ்ணவர்களின் குலமுதல்வர் என்று கொள்ளப்படுகிறார். அதிலும் மண்டயம் அனந்தாண்பிள்ளை வம்சத்தினர் அனந்தாழ்வானுடைய நேர் வம்சத்தினர் என்றும் கூறுகின்றனர்.



சோழ அரசனால் ஸ்ரீராமானுஜருக்கு ஆபத்து ஏற்பட்டபோது, ஸ்ரீரங்கத்திலிருந்து வெளியேறி அவர் மேல் நாட்டிற்குச் சென்றார் என்பது வரலாறு. மற்ற இடங்களுக்குச் செல்லாமல் குறிப்பாக மேல்நாட்டிற்கு (திருநாராயணபுர ப்ராந்தத்திற்குச் சென்றதற்கு)க் காரணம் அனந்தாழ்வானே என்பர். ஸ்ரீராமானுஜர் காலத்திற்கு முன்பிருந்தே அங்கு ஸ்ரீவைஷ்ணவம் மிகவும் பொலிவுடன் இருப்பதை அனந்தாழ்வான் மூலம் அறிந்த ஸ்ரீராமானுஜர், அதனாலேயே அங்கு எழுந்தருளினார் என்பர். பிற ஆசார்யர்கள் எவருக்கும் இல்லாத பெருமையாக அனந்தாழ்வானுடைய பெருமையைப் பகரும் சான்றுகள் பல இன்றும் உள்ளன.

1. திருமலையில் அனந்தாழ்வான் வெட்டிய ஏரி இன்றும் உள்ளது. அது அனந்தாழ்வான் ஏரி என்றே வழங்கப் பெறுகிறது. அனந்தாழ்வான் திருமலையில் அமைத்த ஸ்ரீராமானுஜ நந்தவனம், அதில் அவர் அமைத்த ஸ்ரீராமானுஜ புஷ்கரிணி ஆகியவையும் இன்றும் உள்ளன.

2. திருவேங்கடமுடையான் மோவாயில் அனந்தாழ்வான் சாத்திய பச்சைக் கற்பூரம் இன்றும் திருமலையில் திருவேங்கடமுடையானுக்குச் சாத்தப்படுகிறது.

3. திருவேங்கடமுடையான் மீது அனந்தாழ்வான் எறிந்த கடப்பாரை இன்றும் அத்திருக்கோயில் நுழைவு வாயிலில் வைக்கப்பட்டுள்ளது.

4. அனந்தாழ்வானிடமிருந்து தப்புவதற்காகத் திருவேங்கடமுடையான், கோயிலுக்கு அப்பிரதக்ஷிணமாக ஓடிய நிகழ்ச்சி, இன்றும் பிரம்மோற்சவத்தின் மறுநாள் 'பாக் ஸவாரி' (தோட்டப் புறப்பாடு) என்ற பெயரில் ஐதிஹ்ய உத்ஸவமாக நடைபெறுகிறது.

அன்றையதினம் பெருமாள் கோயிலுக்கு அப்ரதக்ஷிணமாகப் புறப்பாடு கண்டருளி அனந்தாழ்வான் தோட்டத்திற்கு எழுந்தருள்கிறார்.

5. அனந்தாழ்வான் திருவேங்கடமுடையானுக்குப் பிராட்டியைத் தம் மகளாக பாவித்துக் கொடுத்தபடியால், இன்றும் மாப்பிள்ளையான திருவேங்கடவனுக்கு மாமானாரான அனந்தாழ்வான் திருத்தேர் ஸம்பாவனை வழங்குதல் பிரம்மோற்சவத் திருத்தேர் புறப்பாட்டில் நடைபெறுகிறது. அனந்தாழ்வான் வம்சத்தவர்கள் அக் கைங்கர்யத்தைச் செய்து வருகின்றனர்.

6. திருவேங்கடமுடையானே அனந்தாழ்வானுடைய சீடனாக வந்து அனந்தாழ்வானுக்குத் தனியன் அருளிச் செய்தான். அத்தனியன்கள் இன்றும் ஸ்ரீவைஷ்ணவர்களால் அனுஸந்திக்கப்பட்டு வருகின்றன.



7. அனந்தாழ்வான் தாம் ஆராதித்து வந்த எம்பெருமானார் விக்ரகத்தைத் திருவேங்கடமுடையான் அனுமதி கொண்டு திருகோயிலில் பிரதிஷ்டைசெய்தார். திருமலையில் இந்த எம்பெருமானார் ஸன்னிதியைத் தவிர வேறு எந்த ஆழ்வார்–ஆசார்யர்களுக்கும் ஸன்னிதிகள் இல்லை. இங்கு எம்பெருமானாருடைய திருவடிநிலைகள் 'அனந்தாழ்வான்' என்றே வழங்கப் பெறுகின்றது.



8. அனந்தாழ்வான் பரமபதித்த பிறகு அவருடைய நந்தவனத்திலேயே அவருடைய சரமகைங்கர்யம் நடைறும்படியாகத் திருவேங்கடமுடையான் நியமனம் செய்தான். இன்றைக்கும் அவர் அங்கு ஓர் மகிழமரமாக எழுந்தருளியிருக்கிறார். பாக்ஸவாரி உத்ஸவத்தன்றும், அனந்தாழ்வான் பரமபதித்த தினமான திருவாடிப்பூரத்தன்றும் திருவேங்கடமுடையான் அங்கு எழுந்தருளி அனந்தாழ்வானுக்கு (மகிழ மரத்திற்கு) மாலை, ஸ்ரீசடகோபன் ஸாதிக்கிறான்.

9. மதுரகவியாழ்வார் அவதரித்த தினமான சித்திரையில் சித்திரையிலேயே அவதரித்த அனந்தாழ்வான் (திருமலை) திருப்பதியில் மதுரகவிகள் ஸன்னிதியிலேயே எழுந்தருளியுள்ளார். மதுரகவிகள், அனந்தாழ்வான் ஆகிய இருவருடைய சாற்றுமறை தினமான சித்திரையில் சித்திரையன்று இந்த ஸன்னிதிக்கு ஸ்ரீகோவிந்தராஜன் எழுந்தருளிச் சாற்றுமறை வைபவங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

10. அனந்தாழ்வானுடைய சீடர் ஒருவருக்கு ஸந்யாஸம் அளித்து மடாதிபதியாக்கி அவரிடமே திருமலை திருக்கோயில் நிர்வாஹத்தை எம்பெருமானார் ஒப்படைத்தார்.

இன்றைக்கும் அந்தப் பெரியஜீயர் மடத்தின் ஜீயர் ஸ்வாமிகள் வழிவழியாகத் திருக்கோயில் கைங்கர்யங்களை நிர்வஹித்து வருவதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

திருநாராயணபுரத்திலும் அனந்தாழ்வான் அவதார உத்ஸவம் மூன்று நாள்கள் நடைபெறுகின்றன. மூன்று நாள் கைங்கர்யங்களையும் இன்றைக்கும் அனந்தாழ்வான் வம்சத்தவர்களே செய்து வருகின்றனர். அனந்தாழ்வான் திருநக்ஷத்ரமான சித்திரையில் சித்திரையன்று செல்வப் பிள்ளையும் எம்பெருமானாரும் திருவீதிப்புறப்பாடு கண்டருளும்போது அனந்தாண்பிள்ளை திருவம்சத்தவர்கள் இல்லத்தின் முன்பு எழுந்தருளி அவர்கள் ஸமர்ப்பிக்கும் புஷ்பங்களை ஏற்றுக் கொள்ளும் நிகழ்ச்சி இன்றைக்கும் நடைபெறுகிறது.

ஒருமுறை திருநாராயணபுரத்தில் எழுந்தருளியிருந்த அனந்தாழ்வான், அப்போதே திருவேங்கடமுடையனை ஸேவிக்க முடியவில்லையே என்று வருந்த, உடனே திருநாராயணன் தானே அவருக்குத் திருவேங்கடமுடையானாகவே ஸேவைஸாதித்தான். அதனை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஏகாதசி மற்றும் ஹஸ்தநக்ஷத்ரம் ஆகிய தினங்களில் திருநாராயணன், திருவேங்கடமுடையான் போல் ஸேவை ஸாதிக்கும் புழுகாப்பு ஸேவை இன்றைக்கும் நடைபெற்று வருகின்றது.

இவ்வாறு அனந்தாழ்வான் செய்த கைங்கர்யங்களுக்குச் சான்றாகப் பல விஷயங்கள் இன்றும் உள்ளவை போல் வேறு எந்த ஆசார்யருக்கும், எந்த திவ்யதேசத்திலும் இல்லை என்றே கூறலாம்.

அனந்தாழ்வானுக்கு எம்பெருமானார் அளித்த சிறப்புப் பெயரான 'ஆண்பிள்ளை' என்பதையும் சேர்த்து அவருடைய சந்ததியினர் அனைவரும் 'அனந்தாண்பிள்ளை' என்றே வழங்கப் பெறுகின்றனர். இப்படிப்பட்ட அனந்தாண்பிள்ளை வம்சத்தில் அடியேனையும் பிறக்கச் செய்தது அனந்தாழ்வானுடைய திருவருளேயன்றி வேறில்லை. அனந்தாழ்வான் திருமலையில் ஏற்படுத்திய தோட்டத்திலும், அனந்தாழ்வான் அவதரித்த சிறுபுதூர் (தற்பொழுதைய கிறங்கூர்) கிராமத்தில் அமைந்துள்ள ஸன்னிதியிலும், ஒவ்வொரு வருடமும் ஒரு நாள் நடைபெறும் வைபவ உத்ஸவத்திற்குப் பற்பல திவ்யதேசங்களிலிருந்தும் அத்யாபகர்களை எழுந்தருளச்செய்து அருளிச்செயல் ஸேவாகாலத்தை மிகவும் சிறப்பாக நடத்தும் பெரும் கைங்கர்யத்திலும், திருவல்லிக்கேணி நம்பிள்ளை ஸன்னிதியில் பிரதிஷ்டை செய்யப்பெற்றுள்ள அனந்தாழ்வானுக்கு ஐந்து நாள்கள் அவதார உத்ஸவத்தை நடத்தும் கைங்கர்யத்திலும் அடியேனுக்கும் பங்கு கிடைத்திருப்பதற்கும் அவருடைய திருவருளே காரணம்.



திருக்கோவலூர் எம்பெருமானார் ஜீயர் பீடத்தின் பட்டத்தில் எழுந்தருளியுள்ள
ஶ்ரீ உ.வே. தேஹளீச ராமானுஜாசார்யர் ஸ்வாமிக்கும்
ஸௌபாக்யவதீ ஸுநந்திநீ (எ) ஸிம்ஹவல்லிக்கும்
திருக்கோவலூர் ஆயனார் திருமாளிகையில் **4–4–2024** அன்று
திருக்கல்யாண வைபவம் வெகு விமர்சையாக நடைபெற்றது
தம்பதிகள் நல்லபதத்தால் மனைவாழ்ந்து வாயும் நன்மக்களைப் பெற்று மகிழ
கீதாசார்யன் திருவடிகளில் பிரார்த்திக்கிறோம்

நூல்கள் பரிந்துரை

க்ஷேமகாரி சதகம்: *ஸ்ரீமதுபயவே. வில்லூர் நடாதூர் ஆசுகவி ஸ்ரீநிதி ஸ்வாமி இயற்றியது தமிழ் விளக்கத்துடன். வெளியிடுவோர் VKSSCC கிடைக்குமிடம்: 6, பாரதியார் தெரு, சிவகாமி நகர், சென்னை 600073. தொலைபேசி : 09383946438. (344 பக்கங்கள்; விலை குறிப்பிடப்படவில்லை)*

நாச்சியார் கோயில் என்று வழங்கப் பெறும் திருநறையூர் திவ்யதேசத்தில் எழுந்தருளியுள்ள கல் கருடனைப் பற்றி ஸ்ரீ உ.வே. வில்லூர் நடாதூர் ஸ்ரீபாஷ்ய ஸிம்ஹாஸநாதிபதி ஆசுகவி ஸார்வபௌம ஸ்ரீநிதி ஸ்வாமி, (ஸ்ரீ உ.வே. கருணாகராசார்ய ஸ்வாமியின் திருத்தகப்பனார்) அருளியுள்ள 102 ஸம்ஸ்க்ருத ச்லோகங்களைக் கொண்ட நூல் க்ஷேமகாரி சதகமாகும். இந்த ச்லோகங்களுக்கு வித்வான்கள் 34 பேர்கள் (ஒவ்வொருவரும் மூன்று ச்லோகங்கள் என்ற முறையில்) தமிழில் விளக்கங்களை எழுதியுள்ளனர். ஸ்ரீ உ.வே. வில்லூர் நடாதூர் ஸ்ரீபாஷ்யஸிம்மாஸநம் கருணாகராசார்ய ஸ்வாமி இயற்றிய நாச்சியார்கோயில் ஸுப்ரபாதம், ப்ரபத்தி, மங்களம் ஆகிய ஸ்தோத்ரங்களும் இணைக்கப்பட்டுள்ளன. மேலும் அவர் ப்லவ வருஷம் (2021–2022) மார்கழிமாதம் நாச்சியார்கோயிலில் திருப்பாவை உபந்யாஸம் செய்தபோது தினந்தோறும் திருப்பாவைப் பாசுரத்தின் முதல் சொல்லைத் தொடக்கத்தில் அமைத்து இருவிகற்ப நேரிசை வெண்பாவில் கல்கருடனைத் துதித்து இயற்றிய 'கல் கருடன் பாவை வெண்பா' பாசுரங்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

சொற்சுவையும் பொருட்சுவையும் நிறைந்த சுலோகங்களும் அவற்றிற்கு வித்வான்கள் எழுதியுள்ள உரைகளும், அன்பர்களுக்குப் பெருவிருந்தாக அமைந்துள்ளன4

பகவத்விஷய கட்டுரைகள் (பாகம் 1): *ஸ்ரீமத்பரமஹம்ஸ அப்பன் பரகால ராமாநுஜ எம்பார் ஜீயர் ஸ்வாமி எழுதியவை. கிடைக்குமிடம் : திருமால் பதிப்பகம், 6/35, கேசவப்பெருமாள் கோயில் கிழக்குத் தெரு, மயிலாப்பூர், சென்னை 600 004. கைபேசி: 9940281975/8148568577. பக்கங்கள் 264. விலை ரூ. 400.*

ஸ்ரீபெரும்பூதூர் எம்பார் ஜீயர் மடத்தின் பட்டத்தை அலங்கரித்து எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் பரமஹம்ஸ அப்பன் பரகால எம்பார் ஜீயர் ஸ்வாமியின் நூற்றாண்டு விழா இவ்வருடம் மாசி மாதம் கார்த்திகை நட்சத்திரத்தன்று தொடங்குவதையொட்டி அவர் பூர்வாச்ரமத்தில் இருந்தபோதும், பட்டத்தை அலங்கரித்து எழுந்தருளியிருந்தபோதும் எழுதிய பல கட்டுரைகள் தொகுத்து வெளியிடப் பெற்றுள்ளன. 'ஸ்ரீராமானுஜர் வளர்த்த வைணவம்', 'நான் ஒரு சமுதாய வைணவன்', 'நாலடியாரும் நம்மாழ்வாரும்', 'வைதிகன் எங்கே', 'எது பகுத்தறிவு?' முதலிய பல தலைப்புகளில் அவர் எழுதியுள்ள 51 கட்டுரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. மிக மிக எளிய நடையில் அனைவரும் அறிந்து மகிழும்படி தமக்கே உரிய பாணியில் அவர் எழுதியுள்ள கட்டுரை ஒவ்வொன்றும் ஒரு முத்து ஆகும்.

நாள்கள் பல கடந்தபிறகு, பரகாலர் பெரியபெருமாளையும் திருவேங்கடவனையும் பேரருளாளரையும் நினைத்துக் கொண்டு ‘இன்னும் எத்தனைநாள் காவலுடன் இருப்போம்?’ என்று துன்பப்பட்ட மனத்துடன் இருக்க, அவருடைய கனவில் பேரருளாளர் எழுந்தருளி “உமக்குக் கப்பம் கட்டுவதற்கு வேண்டிய பொருள் தருகிறோம். காஞ்சீபுரத்திற்கு வாரும்” என்று அருளிச்செய்தார். இவரும் உறுதியான மனத்தை உடையவராக இருந்தார். பொழுது விடிந்தவுடன் சோழனுடைய அமைச்சன் கப்பம் தர வேண்டும் என்று கேட்க, “காஞ்சீபுரத்தில் ஆபத்துக் காலத்தில் உதவுவதற்காக செல்வம் சேமிக்கப்பட்டிருக்கிறது. அங்கே வந்தால் உமக்குத் தருகிறோம்” என்று திருமங்கை மன்னன் கூறினார். அமைச்சன் “அதையும்தான் பார்ப்போம். மிகவும் கவனமாக (இவர் தப்பிவிடாமல் இருக்கும்படி) காவலிட்டுக் கொண்டு போங்கோள்” என்று தன் வேலைக்காரர்களுக்கு ஆணையிட்டு அழைத்துச் சென்றான். காஞ்சீபுரத்திற்குச் சென்றும் சில இடங்களில் தேடிப்பார்த்தும் புதையல் செல்வம் கிடைக்காமையினால் வருந்திக் கிடந்தார். அப்போது கருணைக் கடலும், அடியவர்கள் வேண்டியவற்றைக் கொடுப்பவருமான வரதராஜப் பெருமாள் “அஞ்சாமல் இரும்” என்று கூறி, வேகவதீ நதிக் கரையில் செல்வம் புதைந்திருக்கின்ற இடத்தை அடையாளத்துடன் கனவில் அருளிச் செய்ய, திருமங்கை மன்னனும் அந்த இடத்தில் செல்வத்தைக் கண்டெடுத்து, கப்பம் கட்டுவதற்கு வேண்டிய பணத்தைக் கொடுத்துவிட்டு, மிகுந்ததை ததீயாராதனம் செய்வதற்காக வைத்துக் கொண்டார். (மறுபடியும் அரசனைச் சேர்ந்தவர்கள் சிலர், “தானியங்கள் சில கொடுக்க வேண்டும்” என்று வற்புறுத்த, அதனால் வருத்தமடைந்து திருமங்கை மன்னன் உறங்கிவிட, முன்பு போலவே வரதராஜப்பெருமான் “வேகவதி மணலைத் திரட்டி அளந்து கொடும்” என்று சொல்ல, இவரும் அப்படியே கூட்டியளக்க, அரசனைச் சேர்ந்தவர்கள் கண்ணுக்கு அவை விலைமதிப்பற்ற நெல்லாகத் தோன்றியபடியால் அவற்றை அளந்து கொண்டு போனார்கள்.) அமைச்சன் திருமங்கை மன்னன் கொடுத்த செல்வத்தை அரசன் முன்னே வைத்து, வரதராஜப் பெருமாள் திருமங்னை மன்னனுக்குக் காட்சியளித்து செல்வம் தந்ததைச் சொல்ல, சோழ அரசன் மிகவும் ஆச்சரியப்பட்டு “இவர் சாமானியர் அல்லர்; உயர்ந்த அடியவர்; இது திரொபதிக்குக் கண்ணன் புடவை சுரந்ததுபோலுள்ளது. இந்த செல்வத்தை நம்முடைய கஜானாவில் வைக்கக் கூடாது” என்று எண்ணி, ஆழ்வாரை அழைத்து, அவரிடத்தில் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, பலவிதமாக அவரை கௌரவித்து அனுப்பினான். அந்த செல்வத்தையும் தெய்வங்களுக்கும், அந்தணர்களுக்கும் செலவிட்டுத் தன்னுடைய குற்றத்தைப் போக்கிக் கொண்டான்.

ஆழ்வாரும் மீதியிருந்த செல்வத்தைக் கொண்டு ததீயாராதனம் நடத்தினாலும், அந்த செல்வமும் தீர்ந்து போய் கையில் ஒன்றும் இல்லாமையால், வழிப்பறி செய்தாகிலும் செல்வத்தைச் சேர்த்து ததீயாராதனம் இடைவிடாமல் நடத்த வேண்டும் என்று முடிவு செய்தார். வழிப்பறி செய்து செல்வத்தைக் கொண்டு வந்து பக்தியுடன் ததீயாராதனத்தை நடத்திக் கொண்டு வந்தார். (மேலும் இதற்காகச் செல்வம் சேர்ப்பதற்கு உதவியாக நீர்மேல் நடப்பான், நிழல் ஒதுங்குவான், தாளூதுவான், தோலா வழக்கன் என்ற நான்கு மந்திரிகளையும் நோக்கி “இரவு நேரங்களில் சில வழிகளில் செல்வத்தை திருடிக் கொண்டு வாருங்கள்” என்று கட்டளையிட்டு ததீயாராதனத்தை நடத்திக் கொண்டிருந்தார்.) எம்பெருமானும் வழிப்பறி செய்வதும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்காகவே ஆகையால், இவர் அடியவர்களுக்கு ஆட்பட்டிருத்தலில் நிலைநின்றவர் என்று கொண்டு, அந்த நன்மையே

காரணமாக இவரை விசேஷ கடாக்ஷம் செய்து அங்கீகரிக்க வேண்டும் என்று திருவுள்ளம் கொண்டான். திருமங்கை மன்னன் வழிப்பறி செய்வதற்குரிய உதவியாளர்களுடன் திருமணங்கொல்லை என்றவிடத்தில் செடிகொடிகளின் பின்புறம் மறைந்து நிற்கின்ற வழியில், “ஸாக்ஷாந் நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும், மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாத் ஶாஸ்த்ரபாணிநா” (ஜயாக்யஸம்ஹிதை) (தேவனான நாராயணனே மனித உருவை எடுத்துக் கொண்டு ஶாஸ்த்ரமாகிற கையினால் உலகில் அழுந்திக் கிடப்பவர்களைத் தூக்கிவிடுகிறான்) என்றும் “பீதகவாடைப் பிரானார் பிரமகுருவாகி வந்து” (பெரியாழ்வார் திருமொழி 5.2.8) என்றும் கூறியுள்ளபடி எம்பெருமானே வந்தான். வயலாலி மணவாளனான எம்பெருமான் திருமணம் செய்து கொண்டு வருகின்ற மணக்கோலத்தில் பிராமண வேஷத்துடன் மனைவியோடு கூடியவனாய், எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டவனாய், மிகுந்த செல்வங்களோடும் பெரும் திரளோடும் வந்தான். இத்திரளைக் கண்டு மகிழ்ந்த திருமங்கை மன்னன் பெரிய ஆரவாரத்துடன் தம்முடைய பரிவாரங்களோடு அவர்களை வளைத்துச் சூழ்ந்து கொண்டு, ஆடைகளையும் ஆபரணங்களையும் பறித்துக் கொண்டார். (மணவாளப் பிள்ளை காலில் அணிந்து கொண்டிருந்த) அறுகாழி மோதிரத்தைத் தம் பல்லால் கடித்து எடுக்க முயல, எம்பெருமானும் இதனைக் கண்டு 'நம் கலியனோ!' (அவ்வளவு வலிமை உள்ளவரோ!) என்று அருளிச் செய்தான்.

பின்னர், பறித்துக் கொண்ட செல்வங்கள் அனைத்தையும் மூட்டையாகக் கட்டி எடுக்கப் பார்த்தபோது, அவை எடுக்க முடியாதபடி கனத்திருக்கவே, மணவாளனான பிராமணனைப் பார்த்து ''நீ ஏதோ மந்திரம் போட்டுவிட்டாய்; (அதனால் தான் மூட்டையை என்னால் எடுக்க முடியவில்லை; என்ன மந்திரம் போட்டாய்)'' என்று தன்னுடைய வாளைக் காட்டி மிரட்ட, எம்பெருமானும் ''அம் மந்திரத்தை உமக்குச் சொல்லுகிறோம், வாரும்'' என்று இவருடைய கழுத்தை அணைத்து, ''என் செவியின் வழி புகுந்து'' என்றபடி காதில் ''செவிக்கினிய செஞ்சொல்'' ஆன அம் மந்திரத்தை ஓதினான். “ருசோ யஜூம்ஷி ஸாமாநி ததைவாதர்வணாநி ச, ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்தம் யச்சாந்யதபிவாங்மயம்” (வ்ருத்தஹாரீதஸ்ம்ருதி) (ருக் யஜுஸ் ஸாமம் அதர்வணம் என்னும் வேதங்களும் மற்றுமுள்ள மற்றுமுள்ள நூல்களும் எல்லாம் எட்டெழுத்தில் உள்ளன) என்றும், “ஸர்வே வேதாந்தஸாரார்த்தஸ் ஸம்ஸாரார்ணவ தாரக:, கதிரஷ்டாக்ஷரோ ந்ரூணாமபுநர்ப்பவகாங்க்ஷிணாம்” (நாரதீயம் 1-41) (மறுபிறப்பின்மையை விரும்பும் மனிதர்களுக்கு எல்லா வேதங்களின் ஸாரப் பொருளாய், பிறவிப் பெருங்கடலைத் தாண்டுவிப்பதான எட்டெழுத்தே புகலாகும்) என்றும், “ஐஹலௌகிகமைஶ்வர்யம் ஸ்வர்காத்யம் பாரலௌகிகம், கைவல்யம் பகவந்தஞ்ச மந்த்ரோயம் ஸாதயிஷ்யதி” (வ்ருத்தஹாரீதஸ்ம்ருதி 6-50) (இவ்வுலகச் செல்வத்தையும் சுவர்க்கம் முதலான மறுமைச் செல்வத்தையும், ஆத்மாநுபவமாகிற கைவல்யத்தையும், பகவானுடைய அனுபவத்தையும் அவ்வவற்றை விரும்புவார்க்கு இந்த மந்திரம் பெற்றுக் கொடுக்கும்) என்றும் சொல்லப்பட்டபடி, அனைத்து வேதங்களின் சுருக்கமாய், அனைத்துத் துன்பங்களுக்கும் காரணமான பிறவிப்பெருங்கடலினின்றும் கரையேற்ற வல்லதாய், இவ்வுலக மேலுலகச் செல்வங்களையும் மோக்ஷத்தையும் கொடுக்கக் கூடியதான எட்டெழுத்து மந்திரத்தை உபதேசித்தான். “ஓமித்யக்ரே வ்யாஹரேத், நம இதி பஶ்சாத், நாராயணாயேத்யுபரிஷ்டாத், ஓமித்யேகாக்ஷரம், நம இதி த்வே அக்ஷரே, நாராயணாயேதி பஞ்சாக்ஷராணி” (நாராயணோபநிஷத்) (ஓம் என்று

முதலில் சொல்ல வேண்டும்; நம: என்று அடுத்தபடியாகவும், அதற்கடுத்தபடி நாராயணாய என்றும் சொல்ல வேண்டும். ஓம் என்பது ஓர் எழுத்து. நம: என்பது இரண்டு எழுத்துக்கள். நாராயணாய என்பது ஐந்து எழுத்துக்கள்) என்றபடி "அவன் பெயர் எட்டெழுத்தும்" என்று எட்டுத் திருவெழுத்துக்களாய், உபநிஷத்தில் கூறியுள்ளபடி மூன்று சொற்களை உடையதாய் உள்ள திருமந்த்ரத்தை உபதேசித்தான். ஸ்வரூபம், உபாயம் (வழி), புருஷார்த்தம் (பயன்) இவற்றைத் தெரிவிப்பதாய், எம்பெருமான் எங்கும் பரந்திருக்கின்ற தன்மையைத் தெரிவிக்கின்ற மற்ற மந்திரங்கள் போல் அல்லாமல், முழுமையான பொருளைத் தெரிவிக்கின்றதாய், "பேராளன் பேரோதும் பெரியோர்" என்றபடி உயர்ந்தவர்களால் கைக்கொள்ளப்பட்டிருப்பதுமான திருமந்த்ரத்தை உபதேசித்தான். "மந்த்ராணாம் பரமோ மந்த்ரோ குஹ்யாநாம் குஹ்யமுத்தமம், பவித்ரஞ்ச பவித்ராணாம் மூலமந்த்ரஸ்ஸநாதந:" (நாரதீயம்) (மந்திரங்களுள் உயர்ந்த மந்திரமும், ரகசியங்களில் உயர்ந்த ரகசியமும், புனிதமானவற்றுள் மிகவும் புனிதமானதும் மிகவும் தொன்மையானதும் மூலமந்த்ரமேயாகும்) என்கிறபடியே மிக உயர்ந்ததாகச் சொல்லப் பட்ட மூலமந்த்ரமான பெரியதிருமந்திரத்தை, தான் நரனாகவும் நாராயணனாகவும் அவதரித்தபோது நரனான தனக்கு, நாராயணனான தானே உபதேசித்துக் கொண்ட குறை தீர, பணப்பையுடன் பணத்தைக் கொடுப்பது போல, "பெற்ற தாயினும் ஆயினசெய்யும் நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்" ஆழ்வார் தம்முடைய வாயாரச் சொல்லும்படி அவருடைய வலது செவியில் திருமந்த்ரத்தை உபதேசித்தான். "லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேஶோ தேவ்யா காருண்யரூபயா ரக்ஷகஸ் ஸர்வஸித்தாதே வேதாந்தேபி ச கீயதே" (லக்ஷ்மீ தந்த்ரம் 28-14) (கருணையே வடிவெடுத்தவளான லக்ஷ்மீ தேவியோடு கூடிய இருடீகேசனே எல்லா ஸித்தாந்தங்களிலும் வேதாந்தங்களிலும் ரக்ஷகனாகக் கூறப்படுகிறான்) என்று கூறியுள்ளபடி ஸ்ரீமஹாலக்ஷ்மியுடன் கூடியவனாய், "காய்சினப் பறவையூர்ந்து பொன்மலையின் மீமிசைக் கார்முகில் போல்" என்றும், "ஸுபர்ணப்ருஷ்டே ப்ரபபௌ ஶ்யாம: பீதாம்பரோ ஹரி:, காஞ்சநஸ்ய கிரே ஶ்ருங்கே ஸதடித்தோ யதோ யதா" (கரிய திருமேனி உடையவனும், பொன்னாடை அணிந்தவனுமான ஸ்ரீமந்நாராயணன் கருடனுடைய திருத்தோள்களில் ஏறியருளி, பொன்மயமான மேருமலையின் சிகரத்தில் இருக்கின்ற மின்னலுடன் கூடிய கருமுகில் போல் மிக விளங்கினான்) என்றும் கூறப்பட்டுள்ளபடி பெரிய திருவடியான கருடன் மீது வந்து, நீலமேகம் போன்ற திருநிறத்தை உடையவனாய், பொன்மலையின் மீது கரிய மேகம் படிந்து உலவுவது போல் விளங்குகின்ற திருமேனியை இவ்வாழ்வாருக்கு மயர்வற மதிநலம் அருளிக் காட்டிக் கொடுத்தான். ஆழ்வாரும் எம்பெருமானுடைய காரணமற்ற அருளால் பெற்ற திருமந்திரத்தையும், அதற்கு உள்ளீடான எம்பெருமானுடைய ஸ்வரூபம், ரூபம், குணம், செல்வங்கள், செயல்கள் இவை எல்லாவற்றையும், "திருமாமகளால் அருள் மாரி" என்றபடி பெரியபிராட்டியின் புருஷகாரத்தால் உண்டான தக்க ஞானக் கண்களால் கண்டு அனுபவித்து, அந்த அனுபவத்தின் மகிழ்ச்சி உள்ளடங்காமல் சொற்களாக வெள்ளமிட்டு வர, பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறியதிருமடல், பெரிய திருமடல், திருநெடுந்தாண்டகம், என்கின்ற ஆறு திவ்யப்ரபந்தங்களையும் அருளிச் செய்தார். நம்மாழ்வார் அருளிச்செய்த நான்கு திவ்யப்ரபந்தங்களுக்கு ஆறங்கமாக ஆறு திவ்யப்ரபந்தங்களை, ஆசு கவி, சித்ரகவி, மதுரகவி, விஸ்தாரகவி என்ற நான்கு விதமான கவிகளால் அருளிச்செய்து 'நாலுகவிப் பெருமாள்' என்ற புகழையும் அடைந்து, உலக்கு உபகாரம் செய்தருளினார்.

(பிரமன் ருத்ரன் இவர்களுடன் கூடியவனாய், கருட வாஹனத்தில் காட்சி தந்த பெருமாளும் பரகாலரைப் பார்த்து, "கலியனே! நீர் உம்முடைய பரிவாரத்துடன் திவ்யதேசங்களுக்கெல்லாம் சென்று மங்களாஶாஸனம் செய்யும்" என்று அருளிச்செய்து மறைந்து விட, திருமங்கை ஆழ்வாரும் தம் மனைவியுடனும், மற்றும் மந்திரிகளுடனும் புறப்பட்டு, பிநாகிநீ, க்ருஷ்ணா, கோதாவரீ நதிகளில் நீராடி, ஸ்ரீபத்ராசலம், ஸிம்ஹாசலம், ஸ்ரீகூர்மம், ஸ்ரீபுருஷோத்தமம் ஆகிய திருத்தலங்களை சேவித்து, கயையில் நீராடி ஸ்ரீவிஷ்ணுபாதத்தையும் தொழுது, கோவர்த்தநம், கோகுல ப்ருந்தாவனம், மதுரை, த்வாரவதீ, திருவயோத்யை, பதரிகாஶ்ரமம், ஸாளக்ராமம், நைமிஶாரண்யம் முதலிய திவ்யதேசங்களை மங்களாசாஸனம் செய்தார். காஞ்சீபுரத்திற்கு எழுந்தருளி அத்திகிரி நாதனை மங்களாஶாஸனம் செய்து, திருமலைக்கு எழுந்தருளி ஆயிரம் பணாமண்டலங்களுடன் எழுந்தருளியுள்ள ஶேஷாசலத்தை ஸேவித்து ஸ்ரீனிவாஸன் அனுமதி கொண்டு புறப்பட்டார். இப்படி)

திருமொழி அருளிச்செய்து கொண்டு திவ்யதேசங்கள்தோறும் ஸேவித்துக் கொண்டு எழுந்தருளிய அவர் சோழ மண்டலத்தில் எழுந்தருளினவளவில் "நாலு கவிப்பெருமாள் வந்தார், நம் கலியர் வந்தார், ஆலிநாடர் வந்தார், அருள்மாரி வந்தார், கொங்குமலர்க்குழலியர் வேள் வந்தார், மங்கைவேந்தர் வந்தார், பரகாலர் வந்தார், பரவாதிமத்தகஜ கண்டீரவர் (மதம்பிடித்த யானை போன்ற புறச்சமயிகளுக்குச் சிங்கம் போன்றவர்) வந்தார்" என்று விருதுகள் முழங்கச் சென்று கொண்டிருந்தபோது, ஞானசம்பந்தருடைய சீடர்கள் வந்து, "எங்கள் சம்பந்தப்பெருமாள் இருக்கிற இடத்தில் நீர் நாலுகவிப் பெருமாள் என்று விருதுகூறிக் கொண்டு செல்வது தகாது" என்று தடுக்க, ஆழ்வாரும் "உங்கள் சம்பந்தப் பெருமாளுடன் வாதம் செய்கிறோம்" என்று கூற, "அப்படியானால் நம்மூருக்கு வாரும்" என்று (சீர்காழிக்கு) அழைத்துக் கொண்டு போனார்கள். ஞானசம்பந்தருக்கும் இதைப் பற்றி அறிவிக்க, அவரும் 'இவருடன் வாதம் செய்வோம்' என்று வந்தார். அந்தவூர் முழுவதும் சைவராய், அங்கு ஒரு திருக்கோயிலோ வைணவர்களோ இல்லாமல் பாஷண்டிகளே மிகுந்திருந்திருந்தார்கள். எம்பெருமானுடைய விக்ரஹமில்லதபடியால் ஆழ்வாருக்கு வார்த்தைகளே எழவில்லை. 'இதற்கு என்ன செய்வது?' என்று யோசித்துக் கொண்டிருந்போது வைஷ்ணவியாக இருந்த ஒரு அம்மையாரைப் பார்த்து, நிலைமையைச் சொல்லி, "உன் திருவாராதன எம்பெருமானை எனக்கு ஒரு க்ஷணம் தரவேண்டும்" என்று கேட்க அவளும் தன் திருவாராதனப் பெருமாளான வெண்ணெயுண்ட தாடாளப் பெருமாளைக் கொடுக்க, ஆழ்வாரும் அவரை எழுந்தருள்வித்துக் கொண்டு சம்பந்தரிருந்தவிடத்திற்குச் செல்ல, சம்பந்தர் ஆழ்வாரைக் குறித்து (ஏளனமாக) ஒரு பாடலைச் சொல்ல, அப்பாடலில் உள்ள குறைகளை ஆழ்வார் சுட்டிக் காட்டினார்.

"அப்படியானால், நீர் ஒரு குறள் சொல்லும்" என்று சம்பந்தர் கேட்க, ஆழ்வாரும் "ஒருகுறளாய் இருநிலம் மூவடி மண்வேண்டி" என்கிற திருமொழியை அருளிச்செய்து, முடிவில் தம் பெருமையெல்லாம் தோன்ற, "ஆலிநாடன் அருள்மாரி அரட்டமுக்கி அடையார்சீயம் கொங்குமலர்க்குழலியர்வேள் மங்கைவேந்தன் கொற்றவேல் பரகாலன் கலியன் சொன்ன சங்கமுகத் தமிழ்மாலை" என்று கூற, சம்பந்தர் இதைக் கேட்டு இதற்கு பதில் சொல்ல முடியாமல், "இப்படியும் ஒருவர் உண்டோ?" என்று ஆச்சர்யப் பட்டு, "'நாலுகவிப் பெருமாள்' என்னும் விருது உமக்குத் தகுதியானதே! எனவே விருது கூறிக்கொண்டே நீர் செல்லும்" என்று கூறி வணங்கிச் சென்றார்.